# ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனை

(தமிழ் மொழி பெயர்ப்பு)

**மொழி பெயர்ப்பாளர்: ஹழ்ரத் மௌலானா பூ அலி ஷாஹ் மதார் ஆரிபு பில்லாஹ் ஷாதுலிய்யா காதிரிய்யா நக்ஷபந்தியா, மேலப்பாளையம்.**

**நுன்முகம்**

**ஷாதுலி ஆண்டகையவர்கள் - ஹிஸ்புல் பஹ்ர் ஆரம்பத்தில் யாஅலி என்றதின் விரிவுரை:**

"குல்ஹுூ வல்லாஹுூ அஹத்" என்ற ஹக்கின் சுருதிப் பரமாணப்படியும் "குல்குல்லும் மின் யின்தில்லா" என்ற ஹக்கின் திருவசனப்படியும், "மன் அரப நப்ஸஹுூ பகத் அரப, ரப்பஹுூ" என்ற மஹா வாக்கியப்படியும் என்னுடைய குருமஹான் சாஷாத்பரம் செய்யிதுனா கல்வத்து ஆண்டவர்கள் கூறிய பிரகாரமும் செய்யிதுனா (இஸ்முல் அஃலம்) அபுல் ஹஸன் சாதுலி ஆண்டவர்களுடைய ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனை ஆரம்பத்தில் தானென்பது தலைவனானபடியால் அவர்கள் நானெனவும் நீ எனவுமிரு தன்மையும் நாடாமல் நடுவே சும்மாதானமரும் நிலையில் தனித்து நின்று (யா அலி) என்றார்கள்.

அதாவது அவர்கள் (அலி) என்ற இஸ்முரப்பும் மர்பூபுமான படியாலென்க.

மேலும் அவர்கள் "அல்லாஹ்" என்ற இஸ்முரப்பும், மர்பூபாயும் "அளீம்" என்ற இஸ்முரப்பும் மர்பூபாயும் "ஹலீம்" என்ற இஸ்முரப்பும் மர்பூபாயும் "அலீம்" என்ற இஸ்முரப்பும் மர்பூபாயுமிருப்பதால் ஹிஸ்புல் பஹ்ர் ஆரம்பத்தில் இத்திவ்விய நாமங்களைக் கூறினார்கள்.

இதற்காகத்தான் (மபாகிருல் அலிய்யா) என்னும் கிரந்தத்தில் வருகிறது:

ஷெய்கு அபுல்ஹஸன் அலிய்யுஷ்ஷாதுலி ரழியல்லாஹுூ அன்ஹுூ அவர்கள் ஷெய்கு அமீனுத்தீன் ரழியல்லாஹுூ அன்ஹுூ அவர்களிடத்தில் சொன்னார்கள்: என்பேரில் அல்லாஹுத்தஆலாவில் நின்றும் (மதத்) இறங்குகிறது. பின்பு தண்ணீரில் வசிக்கும் மச்சங்களிலும் அண்டத்தில் பறக்கும் பட்சிகளிலும் நான் செல்லக் காண்கிறேன் என்று சொன்னார்கள். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்பு என்று கூறினார்கள். அப்போது குத்பு நாயகம் "அனா அப்துல்லாஹ் அனா அப்துல்லாஹ்" - யான் அல்லாஹ்வின் அடிமை, யான் அல்லாஹ்வின் அடிமை என்று சொன்னார்கள்.

மேலும் (புதூஹாத்துல் மக்கிய்யா) என்னும் கிரந்தத்தில் வருகிறது: எல்லா காலத்திலும் குத்புக்கு "அப்துல்லாஹ், அப்துல் ஜாமிவு" என்றும் பெயர். அவர் ஹக்குக்குக்கு கண்ணாடியாகவும், வக்தையுடையவராகவும், காலத்தின் கண்ணானவராகவும், களாகத்ருடைய இரகசியத்தின் அறிவை அறிந்தவராகவும் இருப்பார்.

மேலும் அவருக்குக் காலத்தில் நடக்கும் இல்மெல்லாம் உண்டும். அவருடைய ஹால் மிகுதமெல்லாம் மறைவாக இருக்கும்.

மீண்டும் அதே கிரந்தத்தில் இப்னு அரபி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: (குத்புக்கு) குத்புப் பட்டம் கொடுக்கப்படும் பொழுது அவரை (ஆலம் மிதாலில்) சிம்மாசனத்தில் இருத்தாட்டி அவர்மீது அல்லாஹுத்தஆலாவுடைய (அஸ்மாக்க)ளென்னும் பரிவட்டத்தைக் கொண்டும் பரிவட்டம் போடப்படும். எப்படிப்பட்ட அஸ்மாவானால்? அந்த அஸ்மா ஆலத்தை தேடுகிறது. அந்த அஸ்மாவை ஆலம் தேடுகிறதே அப்படிப்பட்டட அஸ்மாக்கவளைக் கொண்டும் பரிவட்டம் போடப்படும். அப்பொழுது அவர் அவைகளைக் கொண்டும் கிரீடம் சூட்டப்பட்டவராகவும், கடகம் போடப்பட்டவராகவும், கங்கனம் அறிந்தவராகவும் மேலும் கீழும் அவரை அழகு அடைய வளைந்தவராகவும் வெளியாவார். அவருக்கு (பைஅத்) வாக்குதத்தம் கொடுக்கும்படி அல்லாஹுத்தஆலா ஏவல் புரிவான். சகல பொருட்களும் அவருக்கு வாக்குத்தத்தம் கொடுக்கும்.

**ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனை திரட்டிய வரலாறு**

குத்புல் அக்பர் செய்யிதுனா அபுல் ஹஸன் அலிய்யிஷ் ஷாதுலி ஆண்டகையவர்கள், எகிப்தில் ஒருசில காலம் தங்கியிருந்து வரும்போது, ஹஜ்ஜு யாத்திரைக்குரிய நாள் வந்து விட்டது. அப்போது அல்லாஹுத்தஆலாவுடைய புறத்தினின்றும் உருத்தோற்றிரவின்றி (அசரீரியாக) யா அலியே! நீவிர் இவ்வருஷம் ஹஜ்ஜு யாத்திரை செய்வீராக! என்று உத்திரவு பிறந்தது. இந்த உத்திரவை முரீதீன்களுக்கு தெரிவித்தார்கள்.

அதாவது, ஏ! எனது முஹிப்பீன்களே! இவ்வருஷம் ஹஜ்ஜுயாத்திரை செய்யும்படி இறைவனிடமிருந்து உத்திரவு பிறந்திருக்கிறது. நீங்கள் எல்லோரும் ஹஜ்ஜுக்குப் புறப்படுங்கள்.ஒரு கப்பலை குடை கூலிக்கு அமர்த்தி வாருங்கள் என்று கூறினார்கள்.

முரீதீன்கள் கடற்கரைக்குச் சென்று கப்பலை விசாரித்து, அதிக சிரமத்தோடு ஒரு வயோதிக எஹூதியின் கப்பலை குடைக்கூலிக்கு அமர்த்தி அதிலே ஷாதுலி ஆண்டகையவர்களும், முரீதீன்களும் மற்றும் ஹஜ்ஜு யாத்திரை செய்யும் ஏனையோரும் ஹஜ்ஜுக்குப் பிரயாணமானார்கள். கப்பலோ நங்கூரம் தூக்கி கரையை விட்டும் புறப்பட்டது. எகிப்தை அடுத்து (குல்ஷும்) கடல் சென்றதும், காற்று நின்று விட்டது. ஒரு வாரகாலமாய் குல்ஷும் கடலைத்தான் கப்பல் சுற்றி வருகிறது. அதனால் கரையை அடையவோ ஜித்தா செல்லவோ முடியாமல் கப்பல் தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலைமையில், கூடச் சென்ற யாத்திரிகர்கள் ஷாதுலி ஆண்டகை அவர்களை இகழ்ந்து பேசத் துவங்கி விட்டார்கள்.

அதாவது ஷாதுலி நாயகம் அவர்கள் அல்லாஹ்வில் நின்:றும் ஹஜ்ஜு செய்யும்படி உத்திரவு வந்ததாக சொல்லி நம்மை ஏமாற்றி விட்டார். ஹஜ்ஜுக்கோ நாள் நெருங்கி விட்டது. ஹஜ்ஜு செய்த பாடும் இல்லை, நாம் தேசத்தை அடைந்த பாடுமில்லை

என்று கூறினார்கள். இதுவிஷயம் ஷாதுலி ஆண்டவர்களுக்கு தெரியவரவே அல்லாஹ்விடம் முறையிட்டுக் கொண்டு சற்று தலை கவிழ்ந்து இருந்தார்கள்.

அப்பொழுது அல்லாஹ்விடமிருந்து கூப்பிடுகிறவர் கூப்பிட்டார் - யா! அலியே! இந்தப் பிரார்த்தனையை அல்லாஹ் உமக்கு உதிப்பாக்கி வைத்துள்ளானென்று கூறவும், விழிப்புற்று ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனையை ஓத ஆரம்பித்தார்கள்.

கப்பலோட்டிக்கு, (ஆண்டவன் மீது பரிசுத்த விஸ்வாசம் வைத்து) பாய் மரத்தை உயர்த்திக் கட்டும்படி உத்திரவிட்டார்கள். கப்பலோட்டியோ காற்றில்லை என்றான். – "இதோ காற்று வந்து விட்டது, உயர்த்திக் கட்டுமென்று கூறினார்கள். உயர்த்திக் கட்டினான். காற்றும் வந்து விட்டது. கப்பலோ தளையிடப்பட்டிருந்த கயிற்றைத் துண்டித்துக் கொண்டு அமன் ஆபாத்துடன் புறப்பட்டு அதிக வேகமாய் ஜித்தா போய் சேர்ந்து விட்டது.

இந்நிகழ்ச்சியை கண்ணுற்ற கப்பல்காரனாகிய வயோதிக எஹூதியின் புதல்வன், ஷாதுலி ஆண்டகையவர்களிடம் திருக்கலிமா சொல்லி இஸ்லாத்தை தழுவினான். இதைக் கண்ட வயோதிக எஹூதி மனவருத்தமுற்றுச் சஞ்சலத்திலாழ்ந்தவனாயிருக்கும் போது, அன்றிரவு ஒரு கனவு கண்டான்.

அதாவது, வன்மைமிக்க ஒரு கூட்டம் ஷாதுலி ஆண்டவர்களைத் தலைமை தாங்கிச் சென்று கொண்டிருக்கிறது. தன் புதல்வனும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறான். இதைக் கண்ணுற்ற வயோதிக எஹூதி தாமும் கூடவே சென்றான். அப்பொழுது தேவதூதர் அவர்கள் பரிசுத்த இஸ்லாத்தையுடையவர்கள் அவர்களுடன் நீவிர் செல்லக் கூடாதென்று அந்த எஹூதி வயோதிகரைத் தடுத்து நிறுத்தி விட்டார்கள். வயோதிக எஹூதி விழிப்புற்றதும் சுப்ஹு வக்தில் ஷாதுலி ஆண்டகையவர்களிடம் வந்து தீனுல் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார். லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்.

**பிர-பந்தம்**

ஷாதுலி ஆண்டகையவர்கள் கூறியிருக்கிறார்கள். யான் "ஹிஸ்புல் பஹ்ரி"லும், "ஹிஸ்புல் கபீரி"லும் ஒரு அச்சரத்தையாவது வைக்கவில்லை. அந்த அச்சரத்தை ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாயில் நின்றும் கேட்டேயொழிய என்று கூறியிருக்கிறார்கள். **"ரூஹுல் பயான்"** என்றும் தப்சீரில்இ பாரவான்களான இமாம்கள் சிலர் கூறுகிறார்கள்.

ஹதீதில் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தொட்டும் வராத விர்துகளை அவ்லியாக்களில் நின்றும் யாராகிலும் ஒருவர் திரட்டினால் அவர் அல்லாஹுத்தஆலாவுடனும், அவனுடைய ரசூலுடனும், (அதப்) மரியாதை குறைச்சல்

செய்து விட்டார். ஆனால் அவருக்கு அல்லாஹுத்தஆலா அறிவித்துக் கொடுத்ததில் நின்றுமாயிருந்தாலுமொழிய. அப்படி அல்லாஹுத்தஆலா அவருக்குச் சொந்தமான சில சொற்களை அறிவித்துக் கொடுப்பான். அவர் கோர்வையாக்குவார். அப்பொழுது அவர் அல்லாஹ்வுடைய ஏவலுக்கு வழிப்பட்டவராய் இருப்பார். அவர் தானாக உண்டாக்கினவராக இருக்க மாட்டார். அது எப்படிப்போலானால் அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி ஆண்டகையவர்களுடைய ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனையைப் போல் என்று கூறியிருக்கிறார்கள்.

**ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனைக்கு கடலுடைய (ஹிஸ்பு) என்று பெயர் வந்த காரணம்**

இமாம்களான பாரவான்கள் ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனைக்கு அநேக விரிவுரை செய்து அதை ஓதுகிறவருக்கு அபரிதமான பிரதிப் பிரயோஜனங்களும் கூறியிருக்கிறார்கள். இமாம் இப்னு சர்ரூகி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஹிஸ்புல் பஹ்ருடைய சரஹில் கூறுகிறார்கள்.

ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனைக்கு கடலுடைய கடலுடைய ஹிஸ்பென்று பெயர் வந்த காரணமாவது:

இமாம்களான பாரவான்கள் ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனைக்கு அநேக விரிவுரை செய்து அதை ஓதுகிறவருக்கு அபரிமிதமான பிரதிப் பிரயோஜனங்களும் கூறியிருக்கிறார்கள். இமாம் இப்னு சர்ரூகி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஹிஸ்புல் பஹ்ருடைய சரஹில் கூறுகிறார்கள்: ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனைக்கு கடலுடைய கடலுடைய ஹிஸ்பென்று பெயர் வந்த காரணமாவது:

அபுல் ஹஸன் அலி ஷாதுலி ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனையை கடலில் இருக்கும்போது திரட்டினார்கள். அல்லது அதில் பஹ்ர்இ பஹ்ர் என்று மிகுதியாக வருகிறது அதற்காக அல்லது அதில் அடங்கி இருக்கும் (இல்மிலும்) காசியத்திலும் கடலைப் போலாக இருக்கிறதே அதற்காக. ஏனென்றால்? யாராகிலும் ஒருவன் ஹிஸ்புல் பஹ்ருடைய ஹகீகத்தின் பேரில் விரித்துரை செய்ய நாடினால் அதிலடங்கியிருக்கும் புதையலுக்குப் பூரணமாக விரித்துரை செய்ய தராணி பெறமாட்டான் என்று கூறியிருக்கிறார்கள். மேலும் அதில் இஸ்முல் (அஃலம்) இருக்கிறது. சகல இரகசியங்களையும் பொதிந்த ரகசியம் அதில் உண்டாகி இருக்கிறது.

அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி அவர்களுடைய ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனைக்கு அனேக வருசைகள் மபாகிருள் அலிய்யா என்னும் கிரந்தத்தில் வருகிறது: நமது நாயகம் ஷாதுலி ஆண்டகையவர்களும், ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனைக்கு அனேக

வருசைகளும், ஓதி வருகிறவர்களுக்கு அநேக அநேக நன்மைகளும் கூறியிருக்கிறார்கள்.

மேலும் அவர்கள் வபாத்தாகும்போது, அவர்களுடைய கலீபா அபுல் அப்பாஸுல் முர்ஸி ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் மற்றும் தங்களுடைய அஸ்ஹாபிமார்களுக்கும் ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனையை பாடமாக்கிக் கொள்ளும்படி வசியத்துச் செய்திருக்கிறார்கள்.

**ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனையின் சிறந்த நன்மைகள்**

ஹிஸ்புல் பஹ்ருடைய நாயகம் அபுல் ஹஸன் அலியுஷ்ஷாதுலி ஆண்டகையவர்கள் கூறுகிறார்கள்: என்னுடைய ஹிஸ்பை பக்தாதில் ஓதப்பட்டிருந்தால் பக்தாது நகரம் பிடிபட்டிருந்திருக்காது.

மேலும் ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனையை ஓதி வருகிறதில், மறைவான கிருபைகளைக் கொண்டும் நிரப்பப்பட்ட தங்கறிப்புகளும், வருத்தமான முஸீபத்துகளை நீக்கி வைக்கும் இரகசியங்களும் உண்டாகி இருக்கிறது.

மேலும் ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனையை ஒரு வீட்டிலோ, அல்லது ஒரு இடத்திலோ ஓதப்படுகிறதில்லை அந்த ஸ்தலம் புதிதாய் வரும் ஆபத்துக்களை விட்டும் முஸீபத்துக்களை விட்டும் காக்கப்பட்டேயொழிய என்று கூறியிருக்கிறார்கள்.மேலும் இமாம்கள் கூறியிருக்கிறார்கள் யாராகிலும் ஒருவன் ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனையை ஒரு வஸ்துவின் மீது எழுதினால் அந்தப்“ பொருள் அல்லாஹ்வுடைய ஹவ்லைக் கொண்டும், அவனுடைய குவ்வத்தைக் கொண்டும் அவனுடைய காவல் பாட்டிலே இருந்துவரும். மேலும் கோட்டை மதில் மீது அல்லது வீட்டுச் சுவர்கள் மீது எழுதப் பெற்றால், அல்லாஹ்வின் உதவியைக் கொண்டும் கோட்டைக்கும், வீட்டிற்கும் ஒரு ஆபத்தும், முஸீபத்தும் அணுகாது.

மேலும் அல்லாஹுத்தஆலா அளவில் நடக்கிறவனில் துவவர்க்கமுடையோன் ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனையை ஓதி வந்தால் அதில் அவனுக்கு நிரப்பமான அகமியங்களும் தீர்ச்சையுடையோன் அதை ஓதி வந்தால் அதில் அவனுக்கு தெளிவான ஜோதிகளுமுண்டாகியிருக்கிறது.

மேலும் ஷெய்கு அப்துல் ரஹ்மானுல் பிஸ்தாமி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியிருக்கிறார்கள்: ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனையை ஒருவன் சூரியோதயத்தில் ஓதினால் அவனுடைய துஆ கபூலாக்கப்படும். ஜீவகோடிகளுக்கிடையில் (கதர்) மதிப்பு உயரும். அவனுடைய நெஞ்சை தவ்ஹீதைக் கொண்டும் விரிவாக்கப்படும். மேலும் அவனுடைய மிடுமையை நீக்கப்படும். மனுஜின்களுடைய தீங்குகள் அவனை அணுகாது. அவனைக் கண்டவர்கள் யாவரும் அவனை உகப்பார்கள். இராஜாக்களுடைய

சமூகத்திலும் அதிகாரிகளுடைய சமூகத்திலும் நின்று ஓதப்பட்டால் அவனுக்கு அவ்விருவருடைய தீங்கும் அணுகாது.

மேலும் ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனையை ஐங்காலத் தொழுகைக்குப் பின் ஓதிவந்தால், அவனை கல்குகளை விட்டும் தேவையற்றவனாய் சீமான் தனமுடையவனாக்கி வைக்கப்படும். வெள்ளிக்கிழமை முந்தின ஸாஅத்தில் ஓதி வந்தால் மனிதருடைய ஹிருதயங்களில் அவனுடைய முஹப்பத்தை அதிகப்படுத்தப்படும்.

மேலும் ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனையை ஒருவன் நேமமாய் ஓதி வந்தால் வெயில் உஷ்ணத்தில் அகப்படுவதை விட்டும், இடிவிழுந்து சாவதை விட்டும், நெருப்பில் அகப்பட்டு சாவதை விட்டும் காக்கப்படும்.

ஒருவன் கப்பலில் காற்றில்லாமலிருக்கும் சமயம் ஹிஸ்புல் பஹ்ரை ஓதினால் அல்லாஹ்வின் உத்திரவைக் கொண்டும் மணமான காற்று வரும். ஒருவன் ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனையை வளர்பிறையில் சனிக்கிழமை முந்தின ஸாஅத்தில் சரியான ஹிம்மத்தோடும், அழகான ஹாலோடும், ஒரு வெள்ளைக் காகிதத்தில் எழுதி வைத்துக் கொண்டால், அதன் புதுமையான செயல்களினின்றும் நாவினால் சொல்ல முடியாத புதுமைகளைக் காண்பான்.

மேலும் கருமங்களை கைவசப்படுத்தவும்இ தங்கடங்களைத் தட்டவும் ஹிஸ்புல் பஹ்ரை ஓதுகிறவன் (பஹ்ர்) என்று வருமிடத்தில் அவன் நாட்டத்தை நினைத்து முன் நிறுத்தி பணிவோடு ஓதி வரவேண்டும். அதை அஸருக்குப் பின் ஓதி வரவேண்டும்.

ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனைக்கு மனுஜின்னுகளிலுண்டான வழக்காளிகள் பேரில் வெற்றியும், உதவியும் வருத்தி வைக்கும் (துஆ) பிரார்த்தனை என்று பெயர்.

**பாயிதாக்கள்**

மேலும் அநேக பாயிதாக்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளாவது, வயிற்றுவலிக்கு ஓதி ஊத, மாறிப் போகும். வயிற்று உப்பிசம் கண்டால் சாம்பலைத் தொட்டு கையை வயிற்றில் வைத்து ஓதிப் பார்க்க உப்பிசம் நீங்கிப் போகும். சீக்காளிக்கு ரொட்டியில் எழுதி தின்னக் கொடுக்க ஷிபாவாகும். அதை எழுதிக் கட்டிக் கொண்டால் கொலை வழக்கில் வெற்றி பெறுவான். ஸ்திரீ, புருஷன் இருவரும் எழுதி குடித்து வீடு கூட பிள்ளைப் பேறு உண்டாகும். ஒருவனை தன் ஹித்மத்தில் ஐக்கியப்படுத்த வேண்டுமென்றால் பச்சைப் பட்டில் எழுதி கட்டிக் கொண்டால் ஐக்கியப்படுவான். படைக்குப் போகும்போது ஓதிக் கொண்டு, படை முறிந்து வெற்றி கிடைக்கும். வழி தவறியவன் ஓதினால் பாதை தெரியும். அயல் தேசத்தில் இருப்பவனை வருத்த நாடினால் 40 தடவை ஓத அவன் வருவான். ஆண்மைக் கட்டுண்டவன் இதை எழதிக்

கட்டிக் கொண்டால் கட்டவிழ்ந்து விடும். ஷெய்த்தான், ஜின் பிடித்துக் கண் திறக்காமலிருந்தாலும் நெற்றியைப் பிடித்து முகத்தில் ஓதி ஊதவும், கண் திறந்து வாய் பேசுவார்கள். வயல்களில் புழு, பூச்சிகளை விலக்க ஹிஸ்பை எழுதிக் கரைத்து பயிரில் தெளிக்க விலகிப் போகும். மேலும் ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனைக்கு மட்டிலடங்காத பாயிதாக்களும், பிரதி பிரயோஜனங்களும் இருக்கிறது. அதை விரிவாக எழுத இந்நூல் இடந்தராதென்று நிறுத்தலானேன்.

**ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனையை (வாசில்)சித்தி செய்யும் முறை நான்கு வகைப்படும்**

1. **(அமலசகிர்) சிறுசித்தி.** அதாவது 3 நாள் நாளொன்றுக்கு (12) விடுத்தம் ஓத வேண்டும். அதன் ஷர்த்து – நிபந்தனை: மாமிசம் சேர்க்கக் கூடாது. இனிப்பு, புளிப்பு, கைப்பு முதலானது தள்ள வேண்டும். ஹிஸ்பை ஓத ஆரம்பிக்கும் நாள் புதன் கிழமையாக இருக்க வேண்டும். அந்த மூன்று நாளும் நோன்பு இருக்க வேண்டும். பாதங்களுக்கு தோல் செருப்பு அணியக் கூடாது. நாரினால் செய்யப்பட்ட பாதரட்சையை அணிய வேண்டும். தோல் பையால் மொண்ட ஜலத்தில் ஸ்நானம், ஒளு செய்யக் கூடாது. உடல், உடை, ஸ்தலம் சுத்தமாக இருக்க வேண்டும். சூரியன் உதித்தபின் இரண்டு ரக்அத் நபில் தொழுது, அதன் நன்மையை செய்யிதினா அபுல் ஹஸன் அலியுஷ்ஷாதுலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் முதல் எல்லா அவ்லியா அன்பியாக்கள் பேரிலும்(பக்சு) செய்ய வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒரு மிஸ்கீனுக்கு அன்னமளிக்க வேண்டும். ஓதி முடிவானபின் ஒரு மாடாகிலும், அல்லது ஆடாகிலும் அல்லது ஒரு கோழியாகிலும் அறுத்து சதக்கா கொடுக்க வேண்டும். பின்பு அபுல்ஹஸன் அலியுஷ் ஷாதுலி அவர்கள் பேரில் பாத்திஹா ஓதி தானும் சாப்பிட வேண்டும்.

2. **(அமல ஒளஸது) நடுத்தரசித்தி.** அதாவது (12) நாள். நாள் ஒன்றுக்கு முன் கூறிய நிபந்தனையுடன் முப்பது விடுத்தம் ஓத வேண்டும்.

3. **(அமலகபீரு) பெருஞ்சித்தி.** அதாவது 40 நாள். அதாவது நாளொன்றுக்கு முன் கூறிய நிபந்தனையுடன் 9 விடுத்தம் ஓத வேண்டும்.

4. **(அமல அக்பர்) மகாபெருஞ்சித்தி**. அதாவது 40 நாள். நாளொன்றுக்கு முன்கூறிய நிபந்தனையுடன் 19 விடுத்தம் ஓத வேண்டும்.

ஆகவே மேலே கூறியவாறு ஏதாவது ஒரு சித்தியைச்செய்து கொண்டால் அவன் நாடிய கருமங்களைப் பெற்றுக் கொள்வான். சந்தேகமில்லை. இன்ஷாஅல்லாஹ்.

**(இஜாஸ) உத்திரவுப் பெற்றுக் கொள்வதின் பயான்.**

(வாசில்) சித்தி செய்துக் கொள்வதாயிருந்தால் நம்பிக்கைக்குரிய காமிலான ஷெய்குவிடத்தில் (இஜாஸ) உத்திரவு பெற்றுக் கொள்ள வேண்டும். இத்தகைய

உத்திரவைப் பெற்றுக் கொள்வதற்கு ஷாதுலிய்யா தரீகாவைச் சார்ந்த ஷெய்குமார்களாக இருந்தால் மிகவும் நன்று. யாம் நாடிய நாட்டத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால்(இஜாஸ) ஷெய்குமார்களிடத்தில் உத்திரவு பெற்றுக் கொள்வது அத்தியாவசியம். ஒத்திரவு இல்லாமல் ஓதுவார்களானால் குறித்த நாட்டத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஆனால் மகத்தான நன்மைகளும், மேலான பரகத்துகளும், மிகுதமான இரணபாக்கியமும், சொல்லொண்ணா மேன்மையும், (மஃரிபா) எனும் ஞானப் பொக்கிஷத்தையும் பெற்றுக் கொள்வான் என்பதில் சந்தேகமில்லை. சித்தி செய்யாமல் ஓதுவதின் ஷர்த்து – நிபந்தனை அதாவது ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனையை ஆரம்பிக்கும்போது முதலில் கலப்பற்ற (தௌபா) செய்து கொள்ள வேண்டும். ஹலாலான சம்பாத்தியத்தில் நின்றும் யாதாகிலும் (சதகா) கொடுக்க வேண்டும். மேலும் உடலும், உடையும் தலமும் துப்புறவாக இருக்க வேண்டும். இத்துடன் உள்ளச்சப்பாட்டோடு கிப்லாவை முன்னோக்கி இருந்து கொண்டு ஹிஸ்பை ஆரம்பிக்கும்போது ( ஸூரா பாத்திஹாவும், ஆயத்துல் குர்ஸியும், ஸூரா இக்லாஸும்) ஓதியபின் “வஇதா ஜாஅ கல்லதீன“ என்ற ஆயத்தை “கபூருர் ரஹீம்“ வரைக்கும் ஓதி இதன்பின் “ரும்ம அன்ஸல அலைக்கும்“ என்ற ஆயத்தை “பிராதிஸ்சுதூர்“ வரைக்கும் ஓதி, இதன்பின் “முஹம்மதுர் ரஸூலல்லாஹி என்ற ஆயத்தை “வஅஜ்ரன் அளீமா“ வரைக்கும் ஓதி, இதன்பின் “லௌ அன்சல்னா ஹாதல் குர்ஆனா“ என்ற ஆயத்தை அந்த சூரா கடைசிவரை ஓதி, இதன்பின் “அலிப், பே“ இருபத்திஎட்டு ஹர்பையும் ஒரே மூச்சில் ஓதி, இதன்பின் “அஷ்ஹது கலிமா“ ஓதி இதன்பின்

“அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதினின் னபிய்யில் உம்மிய்யி வஅலா ஆலிஹி பிஅததில் அததி வல் மததி மினல் அஸலி இலல் அபதி“ என்ற இந்த சலவாத்தை ஓதி, ஸெய்யிதினா அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ரூஹை ஹாளிராக்கி அவர்கள் முன்னுக்கு இருப்பது போல் நினைத்துக் கொண்டு, அல்லாஹ்வும் அவனது ரஸூலும் பொருத்தமான கருமங்கள்அடங்களின் பேரிலும், ஷாதுலி ஆண்டகை அவர்களைக் கொண்டும் உதவி தேடி (அவூதை) மூன்று விடுத்தம் ஓதி, பிஸ்மியுடன் ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனையை ஆரம்பிக்கவும்.

ஓதும் நேரமாகிறது சுப்ஹுக்கு பின்னும், பொழுது உதயமாகும் முன்னும் ஒரு விடுத்தமும் அசருக்குப் பின் பொழுது அடையுமுன் ஒருதடவையும் ஓதவும்.

**அவூதுபில்லாஹ்வின் வியாக்கியானம்**

أَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

“அவூது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம்“ அறிவாகிய ஆத்மாவைக் கொண்டும் யான் ஜீவதேகமென்னும் ஷைத்தானை விட்டும் யான் என்ற பதத்திலானேன்.

**பிஸ்மில்லாஹ்வின் வியாக்கியானம்**

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

"பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" என்று யாம் கூறினால் அதற்கு அர்த்தமாகிறது என்னிலிருக்கும் இலாஹிய்யத்தான சிர்ரைக் கொண்டும் ஆரமப்பிக்கிறேன். அதன் தேட்டிரவின் படிக்கும் அதன் ஹிக்மத்துத் தேடியபடிக்கும், தயாபரன், பக்த நேசன் என்று அர்த்தமாகும். அல்லாஹுத்தஆலா பிஸ்மில்லாஹ் என்று கூறியதன் அர்த்தமாவது,

உண்டானதெல்லாம் என்னைக் கொண்டே உண்டாயிற்று. உண்டாகப் போவதெல்லாம் என்னைக் கொண்டே உண்டாகும் என்கிறதாயிருக்கும். ஆகவே ஆலம் அனைத்தும் என்னனைக் கொண்டுதான் உண்டாயின என்னைத் தவிர ஒரு வஸ்துவிற்கும் உஜூது இல்லை. கல்கு என்ற சொல் இரவலாம். நாம் ஒன்றை ஆரம்பிக்கப் போவோமேயானால் அப்போது நம்முடைய சிந்தனையில் கருமமடங்களும், அல்லாஹ்வைக் கொண்டதாயிருக்குமென்ற நிய்யத்துடன் ஆரம்பிக்க வேண்டும்.

பிஸ்மில்லாவாகிறது குர்ஆனுக்குத் திறவுகோலாகவும் (லௌஹுல் மஹ்பூலு) பலகையில் எழுதுகோல் (கலம்) எழுதியதில் முந்தினதாகவும், ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பேரில் இறக்கப்பட்டதில் முந்தினதாகவும் இஸ்முல் அஃலமாகவும் இருக்கும்.

**அல்லாஹ், ரஹ்மான், ரஹீம் முதலான திவ்விய நாமங்களின் பாயிதா**

அல்லாஹ் என்ற நாமத்தை எல்லா ஒவ்வொரு நாளிலும் ஆயிரம் விடுத்தம் ஓதிவந்தால் பூரண யகீன் உண்டாகும். மேலும் தொழுகைக்குப் பின்னால் நூறு விடுத்தம் நேமமாய் ஓதி வந்தால் அவனுக்கு கஷ்பு உண்டாகும். யாரஹ்மான் என்ற இஸ்மை தொழுகையடங்களுக்குப் பின்னால் நூறு விடுத்தம் ஓதி வந்தால் அல்லாஹுத்தஆலா அவனை மறதி கேட்டை விட்டும் தூரமாக்குவான். யாரஹீம் என்ற இஸ்மை எல்லா ஒவ்வொரு நாளிலும் நூறு விடுத்தம் ஓதி வந்தால் அவனைப் பகைவர்கள் பிரியப்படுவார்கள். யா அலீ என்ற இஸ்மை ஓதி வந்தால், மேலாம்பரமும் உயர்வும் கிடைக்கும். யா அளீம் என்ற இஸ்மை கல்பில் மிகுதம் திக்ரு செய்து வந்தால் அல்லாஹுத்தஆலாவிடத்தில் சிறப்பு பெற்றவனாக ஆகி விடுவான்.

யா ஹலீம் என்ற இஸ்மை ஓதி வந்தால் அமைதியுண்டாகும்.

யா அலீம் என்ற இஸ்மை மிகுதம் ஓதி வந்தால் அல்லாஹுத்தஆலா அவனுடைய பாவத்தை மன்னிப்பான்.

**ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனை**

يَااَللهُ يَاعَلِيُّ يَاعَظِيْمُ يَاحَلِيْمُ يَاعَلِيْمُ

பராபரனே! மேலாம்பரனே, வலுப்பமானவனே, அமர்த்தியானவனே, சர்வத்தையும் அறிந்தவனே.

اَنْتَ رَبِّيْ وَعِلْمُكَ حَسْبِيْ فَنِعْمَ الرَّبُّ رَبِّيْ وَنِعْمَ الْحَسْبُ حَسْبِيْ تَنْصُرُ مَنْ تَشَآءُ وَاَنْتَ الْعَزِيْزُ الرَّحِيْمُ

நீ என்னுடைய ரப்பு. உன்னுடைய இல்மு எனக்குப் போதும். வளர்ப்பவனில் என் ரப்பு நல்லவன். போதுமானவனில் என் ஹஸ்பு நல்லவன். நீ நாடியவர்களுக்கு உதவி புரிவாய். நீ பூராயமுடையவன். இஜ்ஜத்துடையவன்.

نَسْاَلُكَ الْعِصْمَةَ فِيْ الْحَرَكَاتِ وَالسَّكَنَاتِ وَالْكَلِمَاتِ وَالْاِرَادَاتِ وَخَطَرَاتِ مِنَ الظُّنُوْنِ وَالشُّكُوْكِ وَالْاَوْهَامِ السَّاتِرَةِ لِلْقُلُوْبِ عَنْ مُّطَالَعَةِ الْغُيُوْبِ

மறைவான ஆலத்தைப் பார்ப்பதை விட்டும், கல்புகளை தடுக்கும்படியான மருண்ட புத்திகளை விட்டும் ஷக்கு, சந்தேகங்களை விட்டும், போலி எண்ணங்களை விட்டும், ஊசாட்டங்களிலும், நாட்டங்களிலும், பேச்சு வார்த்தைகளிலும், உசும்புதல், ஒடுங்குதல்களிலும் கார்மானம் உன்பால் கேட்கிறோம்.

திட்டமாக முஃமின்களை பயங்கரத்தைக் கொண்டும் பகைவருடைய தடுத்தலைக் கொண்டும் சோதிக்கப்பட்டது. மேலும் அவர்களைக் கடிசான வேதனையாக வேதனை செய்யப்பட்டது முனாபிக்கானவர்களும், மேலும் தங்கள் கல்புகளில் பலம் கெட்ட நிண்ணயமும் உண்டாயிருந்ததே அவர்களும், கூறிய நேரத்தை நினைத்துப் பாரும், அவர்கள் கூறினார்கள் வெற்றி கிடைக்குமென்று. அல்லாஹ்வும் அவனுடைய ரஸூலும் வீணே ஒழிய நமக்கு வார்த்தைப்பாடு செய்யவில்லை என்று சொன்னார்கள்.

ஆகவே எங்களை காபிர், முனாபிக்கு இரு தரத்தாருடைய துன்பங்களை விட்டும் காத்து எங்களுக்கு வெற்றியைக் கொடு. (தீனில் ஸ்தாபிதமாக்கி வை) அதாவது நிலைநாட்டி வை.

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு கடலை நீ வசமாக்கிக் கொடுத்ததுபோல், கண்டிப்புடைய (ஆலம்) என்னும் பல நினைவென்ற, இந்தக் கடலை அதாவது ஒரு முகப்படுத்துவதை எங்களுக்கு வசப்படுத்திக் கொடு.

இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாமுக்கு நெருப்பை வசப்படுத்திக் கொடுத்ததுபோல் ஷஹ்வத் என்னும் காம அக்கினியை எங்களுக்கு வசப்படுத்திக் கொடு.

தாவூது அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இரும்பையும், மலையையும் வசப்படுத்திக் கொடுத்ததுபோல் (நப்ஸாகிய மனமென்னும்) இரும்பையும் உஜூதென்னும் மலையாகிய (அகங்காரத்தையும்) எங்களுக்கு வசப்படுத்திக் கொடு.

சுலைமான் அலைஹிஸ்ஸலாமுக்கு மனு, ஜின், ஷைத்தான், காற்று இவைகளை வசப்படுத்திக் கொடுத்ததுபோல் மனித பண்பு, திறை, வேறுபாடு, ஹவா, நப்சென்னும் காற்று இவைகளை எங்களுக்கு வசப்படுத்திக் கொடு.

எங்கள் நபிகள் பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மனு, ஜின் இரு கூட்டத்தாரையும் புராகையும், பிறையையும், பொழுதையும், வசப்படுத்திக் கொடுத்தது போல் மனு, ஜின் என்ற நாமரூபத்தை மாற்றி சத்துஇ சித்து, ஆனந்தத்தையும், வழிப்பாடான நப்சையும் கல்பென்ற பிறையையும், ரூஹென்ற பொழுதையும், எங்களுக்கு வசப்படுத்திக் கொடு.

**நபிகள் பிரானின் அற்புத ஆகமம்**

அறிந்து கொள்வீராக! நம்முடைய நபிகள் பிரான் சல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு, முன்னுள்ள நபிமார்களுக்கு கொடுத்ததையும் கொடுத்து, அதற்கு மேலான மட்டில்லாத அற்புதங்களையும் ஹக்குத்தஆலாவால் கொடுக்கப்பட்டிருந்தது. அது எதுபோலெனில்,

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு “ஆசாக்கோல்“ பாம்பாகுவதைக் கொடுத்தான். நம்முடைய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், ஈத்தங்குச்சி முணங்கி அழுதது. அதிலும் இது அற்புதமானது.

அபூஜஹல் ஒருதடவை நம்முடைய நாயகமவர்களை கல்லைக் கொண்டு எறியப்போனான். அப்போது இரண்டு சர்ப்பம் நாயகமவர்களின் தோள்புயத்திலிருந்தும் எழும்பிச் சீறஇ அபூஜஹல் கண்டு திடுக்கிட்டு அஞ்சி ஓடி விட்டான்.

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு கடல் பிளந்து வழிவிட்டது. நம்முடைய நாயகமவர்களுக்கு சந்திரன் இரண்டாய்ப் பிளந்தது.

மேலும் வானத்திற்கும்இ பூமிக்குமிடையில் "பஹ்ருல் மக்பூபு" என்னும் கடலிருக்கிறது. பூமி கடல் அந்தக்கடலுக்கு ஒரு துளிபோலவாம். அக்கடலைக் கடந்துதான் நம்முடைய நாயகமவர்கள் மிஃராஜிற்குப் போனார்கள்.

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு கல்லில் நின்றம் தண்ணீர் ஒலித்தோடியது. நம்முடைய நாயகமவர்களுடைய விரல்களுக்கிடையில் நின்றும் தண்ணீர் ஒலித்தோடியது. இது அதிலும் அற்புதமானது.
மூஸா அலைஹிஸ்ஸலாமை தூர்ஸீனா மலையில் வைத்துத் தரிசித்து அவரோடு வசனித்துக் கொண்டான். நம்முடைய நாயகமவர்களை மிஃறாஜில் தன் சமூகத்தில் அழைத்து தரிசித்து அவரோடு வசனித்துக் கொண்டான். அவனை முடுகினதும், கண்ணாரக் கண்டதும், அதிகமாம். ஆதலால் தூர்ஸீனா மலைக்கும், அல்லாஹ்வுடைய அர்ஸுக்கும் இடையில் மிகுந்த வித்தியாசமிருக்கிறது.

இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நெருப்பை விட்டும் சலாமத்தாக்கினான். நம்முடைய நாயகமவர்களை படை என்னும் நெருப்பை விட்டும் ஈடேற்றமாக்கினான். ஒரு குழந்தை நெருப்பில் விழுந்து தொலி கரிந்து போய்விட்டது. அப்போது நமது நாயகமவர்கள் தங்கள் திருக்கரத்தால் தடவினார்கள். அப்போதே சுவாத்தியமாகிவிட்டது.

இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு குல்ல"தெனும் தோழமைத் தனத்தைக் கொடுத்தான். நம்முடைய நாயகமவர்களுக்கு அதையும் கொடுத்து அதிலும் மேலான முஹப்பத்தையும் கொடுத்தான்.

தாவூது அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இரும்பு இளகியது. நம்முடைய நாயகமவர்களுக்கு உலர்ந்த கம்பு பசிந்து துளிர் விட்டது. சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு பறவைகளின்பேச்சைப் படித்துக் கொடுத்தான். நம்முடைய நாயகமவர்களுக்கு கல்லும், மானும், நஞ்சூட்டிய இறைச்சியும் பேசியது. ஒட்டகை முறையிட்டது.

சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு காலை நேரம் ஒருமாத பயணமும், மாலை நேரம் ஒருமாத பயணமும் போகும் காற்றை வாகனமாய்க் கொடுத்திருந்தான். நம்முடைய நாயகமவர்களுக்கு காற்றினும் அதிக விரைவுள்ள விழியை (றாயும்) மென்னத்தக்கஇ மின்னினும் அதிக வேகமாய் போகின்ற புறாகை வாகனமாய்க் கொடுத்தான். அது ஒரு வினாடியில் பறந்து பூமியில் நின்றும், அல்லாஹ்வுடைய அர்ஷளவில் கொண்டுபோய் சேர்த்தது. அதன் தொலை தூரம் ஏழாயிரம் வருட தொலை தூரமாக இருக்கும். அதற்கு மேலுள்ளதை அல்லாஹுத்தஆலாதான் அறிவான். புறாக்கின் உண்மையும் மரணத்தின் தன்மையும்

அறிந்து கொள்வீராக! புறாக் என்றால் வாசியாம். அந்த புறாகென்ற வாசியால் வல்லோனிடம் சென்று நல்லோர் பதத்தை நாடு.

அதாவது, இந்த சரீரமானது உலக மயக்கத்தில் ஆழ்ந்தவர்களுக்குஇ கர்மதேகி என்று பெயர். இந்த கர்மதேகத்தையுடையவர்களுக்கு, மரணமென்னும் மௌத்தென்ற மிருத்தியு புறங்கழுத்தென்னும் பிடரியிர்தானே வாசம் செய்வதாலும், ஆடுகின்ற பம்பரத்திற்கும்இ அதை ஆட்டி வைக்கும் கயிற்றிற்கும் எப்படி ஒற்றுமை இல்லாதிருக்கிறதோ அதேபோல் கர்மதேகிகளுக்கும், அவர்களை ஆட்டிப் படைக்கும் பிராணவாய்விற்கும், பற்றில்லாதிருப்பதாலும், அவர்கள் நடக்கையிலும் இருக்கையிலும் உண்ணும் போதும், உறங்கும்போதும், வண்டியாலும், கப்பலாலும், மரத்தாலும், செடி கொடிகளாலும், முள்ளாலும், கல்லாலும், குளத்தாலும், ஆற்றாலும், கிணற்றாலும், இரவிலும், பகலிலும் இன்ன நேரமென்று நிச்சயமில்லாமல், திடீரென்று மரணம் சம்பவிக்கின்றது. இதை நோக்குமிடத்து அவர்களின் பிராண வாய்வாகிய பிடரியிலிருக்கும் மிருத்தியுதேவதைதான்.

அதாவது இஸ்றாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கைப்பற்றி இருப்பது போல் தோற்றுகிறது. அன்றியும் ஆடு, மாடு, கழுதை, குதிரை, யானை, ஒட்டகம், நாய், பூனை, குரங்கு, பாம்பு, கீரி இவற்றை ஒரே கிடங்கில் அடைப்போமாகில் ஒன்றையொன்று தெரிசித்த மாத்திரத்தில், ஒன்றையொன்று கொல்லவும், ஒன்றையொன்று வெல்லவும், ஒன்றையொன்று தின்னவும், இப்படி சத்துரு, மித்துரு, தன்மை மேலிட்டு அந்த கிடங்கானது பிணக்காடாக பாழாகிவிடும்.

அதுபோல் இந்த திரேகத்தினிடமாகஇ பூதம்-பொறிஇ புலன் கண்மேந்திரியம் கண்ம விஷயம் காரணம் அறிவு நாடி வாய்வு ஆராதாரம் மண்டலம் மலம் தோம் குணம் இராகம் வினை அவஸ்தை ஆகிய இவற்றினுட்பிரிவுகள் யாவும் கூடி தொண்ணூற்றாறு தத்துவங்களும், ஒன்றுக்கொன்று ஏறுக்குமாறாய்ச் சந்தித்து இந்த தேகத்தை எவ்விதத்திலும் கடைதேறாவண்ணம் செய்து, நரகமென்னும் படுகுழியை அடையச் செய்து விடுகின்றது.

புண்ணிய தேகமோவென்றால், மேலே கூறிவந்த தொண்ணூற்றாறு தத்துவங்களுளுக்கும் அவைகள் அடங்கிய கிடங்காகிய தேகத்திற்கும், புருஷதாரியான பிராணவாய்வானது, ஒடுங்குமிடமும், உயருமிடமும் தெரிந்து இடகலை, பின்கலை இரண்டிலும் ரேசிக்கும் மனவே பூரித்து, பூரிக்குமளவே பொருந்தவைத்து நான் என்ற சிர்க்கற்றுதானென்ற துணைதொட்டு, வானென்ற வெளியிடமாகவே விழியைச் செலுத்தி ஒழியா தவத்திலிருக்கின்றமையால், இருளில் அகப்படாமலும், எக்காலமும் சாகாமலுமிருக்கின்றனர்.

இதற்காகத்தான் தென்காசியில் வாசம் செய்த குருபிரான் “ஷெய்கு அப்துல் காதிர் ஷாஹன்ஷா“ அவர்கள் “மணிமுத்ர் மாலை“ யென்னும் கிரந்தத்தில் கூறி இருக்கிறார்கள்: அதாவது:

**பாட்டு**

“அஞ்சு ஓர் ஆறையும் நாடு
அதை யறியாமலிருப்பதே கேடு
வஞ்சவினைதனை வழியாய் அருத்திடு
வாசியில் ஹுவதை வசமாய் பிடித்திடு
கொஞ்சி குருதன்னை நெஞ்சிற் தறித்திடு
கோலப்படுமுன் தன்தூலம் நிலைத்திடும்
குடியல் லடாயித்த மேனி
ஹுவதை சொல்லடா நீ பேணி“

“சுலைமான் அலைஹிஸ்ஸலாமுக்கு ஜின்னை வேலை வாங்க வசப்படுத்திக் கொடுத்தான். நம்முடைய நாயகமவர்களுக்கு ஜின் வசப்பட்டு இஸ்லாத்தை தழுவியது. சுலைமான் அலைஹிஸ்ஸலாமுக்கு பறவைகளின் பட்டாளங்களில் நின்றும் ஏத்தியெண்ணப்பட்டது. நம்முடைய நாயகமவர்களுக்கு மலைப்பொதும்பில் “மாடப்புறாவும்“ “நூலாம் பூச்சியும், ஈடுகொடுத்து கொண்டிருந்தது.

**உயிரில்லாத எட்டு வஸ்துக்கள் நாயகத்தோடு பேசியது**

அறிந்து கொள்வீராக! 1**ஆவது பத்து.** அதாவது எமனிலிருந்து வந்த பன்னீராயிரம் பேரை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இஸ்லாத்தில் அழைத்தபோது, நீர் நபி என்பதற்கு அடையாளம் என்ன என்று கேட்டதற்கு, அப்போது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு கம்பை ஹுபல் என்ற புத்தின்பேரில் வைத்து நான் யார் என்றதற்கு நளினமாக தாங்கள் அல்லாஹ்வுடைய ரசூல் என்று கூறியது, வந்தவர்கள் எல்லோரும் இஸ்லாத்தைத் தழுவி விட்டார்கள். மேலுமிதுவும் தவிர வேறு பல விக்கிரகங்களும், நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் பேசியிருக்கிறது.

2**ஆவது கல்.** அதாவது ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்: மக்கத்தில் நான் ஒரு கல்லை அறிவேன். எனக்கு நுபுவத்து வருமுன்இ அந்தக்கல் என் பேரில் சலாம் சொல்லுவதாயிருந்தது. இப்போதும் அந்த கல்லை நான் அறிவேன் என்று திருவுளமானார்கள். அறிந்து கொள்வீர்களாக! அந்தக் கல் அபூபக்கர் சித்தீக் ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய வீட்டுக்கு எதிர்த்த வீட்டுச் சுவரில் இருக்கிற கல் என்று இமாம்கள் கூறுகிறார்கள். இப்போதும் அவ்விடத்திலிருக்கிற ஜனங்கள் பறக்கத்துக்காக அந்தக் கல்லைத் தொட்டுக்

கொள்கிறார்கள். இதைத்தவிர ஓடைக்கரைகளிலும், தெருவீதிகளிலும், உண்டான கல்லும், மரமும், அவர்களுக்கு சலாம் சொல்லுகிறதாகயிருந்தது என்று வருகிறது.

3**ஆவது ஆட்டு முன்சந்து**. அதாவது கைபர் யத்தத்தின்போது ஒரு யஹூதிப் பெண் ஆட்டு முன்சந்தில் கறிசமைத்து நஞ்சூட்டி நாயகத்திற்கு விருந்து கொடுத்தாள். அந்தச்சந்துக் கறியானது, அல்லாஹ்வுடைய ரசூலே! என்னில் நஞ்சூட்டப்பட்டிருக்கிறது என்று கூறியது.

4**ஆவது சுவர்.** அதாவது மாலிகு ரழியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: ஒருநாள் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களையும் அவர்களுடைய ஆண்மக்களையும் அழைத்து தங்கள் கிட்டே வைத்து, தங்களுடைய பரிவட்டத்தைக் கொண்டும் அவர்கள் எல்லோரையும் மூடி, ஆண்டவனே! இவர்கள் என் சித்தப்பன், என் தகப்பனின் ஒருவராவர். என் வீட்டையுடையவர்களை என்னுடைய இந்த பரிவட்டத்தைக் கொண்டு மறைத்தது போல், அவர்களை நீ நாளை நரகத்தை விட்டும் மறைத்து விடு என்று கூறினார்கள். அப்போது வீட்டுவாசல் படிகளும்இ சுவர்களும் ஆமீன் ஆமீன் என்று கூறின“ என்று சொன்னார்கள்.

5**ஆவது உஹது மலை.** அதாவது ஒருநாள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அபூபக்கர் சித்தீக், உமர், உதுமான் ரழியல்லாஹு தஆலாஅன்ஹும் ஆக நால்வரும் உஹது மலை மீதேறவே அந்த மலை துளும்பியது. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மலையே துளும்பாதே. உன் மீது நபியும், ஸித்தீகும், இரண்டு ஷஹீதுகளுமே ஒழிய மற்றயாரும் ஏறவில்லை என்று கூறவே, துளும்புதல் நின்று விட்டது. இந்நிகழ்ச்சியும் பேசியதற்கொப்பாகுமென்று “பஹ்ஜா“ என்னும் கிரந்தத்தில் வரையப்பெற்றுள்ளது.

6**ஆவது ஈத்தங்கட்டை.** அதாவது நபிகள் நாயகம் மதீனா முஷர்ரபா மஸ்ஜிதில் ஒரு ஈத்தங்கட்டை மீது நின்றுகொண்டு, குத்பா பிரசங்கம் செய்தார்கள். மஸ்ஜிதில் வேறொரு பிரசங்கம் மேடை கட்டப்படவே, அந்த ஈத்தங்கட்டையை விட்டும் புதிய மற்றொரு பிரசங்க மேடையின் பால் நாயகம் திரும்பவே, அந்த ஈத்தங்கட்டையானது மழலை சப்தம் போன்றும், சூல் நிறைந்த ஒட்டகம் முணங்குவது போன்றும் முணங்கி அழவே, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்தக் கட்டையை எடுத்து அணைத்துக் கொண்டார்கள். அதன்பிறகு அழுகை அமர்ந்து மழலை போல் முனங்கியது. நாயகமதை நீ இருந்த தோட்டம் போகிறாயா? அல்லது அல்லாஹ்வுடைய அவ்லியாக்கள் உன்னில் நின்றும் புசிக்க நீ சொர்க்கம் சேருகிறாயா? என்று கேட்டுவிட்டு அதனிடம் காதைத் தாழ்த்தி கொடுத்தார்கள். அப்போது அந்தக் கட்டை எல்லோரும் கேட்கும்படியாக, நாயகமே! நான் சொர்க்கத்திலிருக்கிறேன் என்று கூறியது. அதன்பின் அந்தக் கட்டையை அவ்விடத்திலேயே புதைக்கப்பட்டது.

7**ஆவது கப்ரில் புதைக்கப்பட்ட மயித்**. அதாவது, தலாயில் என்னும் கிரந்தத்தில் வருகிறது, ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு மனிதனை

இஸ்லாத்தில் அழைத்தார்கள். அவர் என் மகளை கப்ரிலிருந்தும், எழுப்பிக் கொடுமென்று சொல்லி புதை குழியைக் காட்டினார். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கப்ரின் முன் நின்று கொண்டு இன்னானுடைய புதல்வியே! என்று அழைக்கப்படவே, கப்ரிலிருந்து லப்பைக்கஇ வஸஹ்தைக்க“ என்று எதிர்சப்தம் கேட்டது. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நீ வருகிறாயா? என்று கேட்டதற்குஇ அல்லாஹ்வுடைய ரசூலே ! அல்லாஹுத்தஆலா எனக்கு என் தாய், தந்தையர்களைப் பார்க்கிலும்இ கைராகவும், மேலும் ஆகிரம், துன்யாவைப் பார்க்கிலும் கைராவும் இருக்கும் என்று கூறினாள்.

8**ஆவது பொருள்கள்:** அதாவது மரங்களும், மற்றவைகளும் நபிகள் நாயகத்திற்கு சுஜூதுசெய்தது.

ஒரு நாட்டரபி நபிகள் நாயகத்திடம் வந்தார். அப்போது நபிகள் நாயகம் அவர்கள் உமக்கு கைரகளவில் ஹாஜத் உண்டா? என்று வினவியபோது, அவர் அதென்னவென்று கேட்டார்.. அப்போது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நீவிர் ஈமான் கொள்வது என்று கூறவே அந்த அரபி நீங்கள் நபி என்பதற்கு ஷாஹிது என்னவென்றார்?

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு உடை மரத்தைப் பார்த்து இந்த மரமென்று கூறவே, அந்த உடைமரம் வேரோடும் தூரோடும் பூமியைப் பிளந்து கொண்டு நாயகத்திடம் வந்தது. நாயகம் நான் அல்லாஹ்வுடைய ரசூலென்று ஷாஹிது சொல்லென்று கூறவே, அந்தமரம் தாங்கள் அல்லாஹ்வுடைய ரசூலென்று ஷாஹிது கூறிஇ தான் நின்ற இடத்திற்கு மீண்டு விட்டது. அந்த நாட்டரபி அக்கணமே ஈமான் கொண்டு இஸ்லாத்தைத் தழுவினார்.

ஆகவே, இதுமட்டுமல்ல, வேறு எத்தனையோ ஜீவஜந்துக்களும் நாயகத்தோடு பேசிய செய்திகளும், அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் நம்முடைய ஆண்டவர்கள் நபிகள் பிரான் ஸல்லல்லாஷஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்து ஸலவாத்தை மிகுதமாய் ஓதிக் கொள்வோமாகவும். ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

وَسَخِّرْ لَنَا كُلَّ بَحْرٍ هُوَ لَكَ فِي الْأَرْضِ وَالسَّمَاءِ وَالْمُلْكِ وَالْمَلَكُوتِ

“விண்ணுல“கென்னும் ஆல மலகூத்திலும் மண்ணுலகென்னும் ஆலம் ஷஹாதத்திலும் உள்ளவை யாவும் இறைவனே! உன்னுடையவை அதாவது. உன்னுடைய உஜூது அத்தகைய உஜூதென்னும் கடல் அடங்கலையும் எங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்தருள். கருத்தாவது: “வஹ்தத்துல் உஜூதெ“ன்னும் கடலின் பூரணத்தை வசப்படுத்திக் கொடு என்பதாம்.

அறிந்து கொள்வீராக. ஆலமுல் முல்கு என்றது கண்காட்சியைக் கொண்டும் எத்தப்பட்டஆலம், ஆலமுல் மலகூத்தென்றது, அறிவைக் கொண்டும் அகப்பார்வையைக் கொண்டும் எத்தப்பட்ட ஆலம் அல்லது ஆலமுல் முல்கு என்றது பர்க்குடைய ஆலமென்றும் ஆலமலகூத்தென்றது ஐம்வு உடைய ஆலமென்றும் கூறப்படும்.

وَبَحْرِ الدُّنْيَا وَبَحْرِ الْاٰخِرَةِ

மேலும் துன்யாவிலும் ஆகிரத்திலும் ஷுஹு தென்னும் கடலை எங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்தருள். அறிந்து கொள். "துன்யாவாகிறது" விளையாட்டும், வீண், ஊண், தீன் முதலானதின் அலங்காரமும், தகப்பன், தாய் வமிசம் கொண்டு உங்களுக்கிடையில் பெருமையடிப்பதும், பணம் காசுகளிலும் பிள்ளை குட்டிகளிலும் மிகுதியிருப்பதைக் கொண்டும் வீறுபேசுகிற கெட்ட குணமாயிருக்கும்.

ஆகிரமாகிறது மேற்கூறியவைக்கு மாற்றமாகிய நற்குணங்களாயிருக்கும்.

وَسَخِّرْ لَنَا كُلَّ شَيْءٍ يَا مَنْ بِيَدِهٖ مَلَكُوْتُ كُلِّ شَيْءٍ كٓهٰيٰعٓصٓ كٓهٰيٰعٓصٓ كٓهٰيٰعٓصٓ

காப் ஹா யா ஐன் ஸாத் என்ற ஐந்து ஹர்புகளின் மகிமையைக் கொண்டும் வஸ்துக்கள் அடங்களின் ஆளுகையை தன்கைவசம் வைத்திருப்பவனே!

அதாவது தத்துவப் பொருளே! வஸ்துக்கள் அடங்களையும் எங்களுக்கு வசப்படுத்திக் கொடு. கருத்தாவது, வஸ்துக்களிலே உன்னை ஸுஹுதுச் செய்வதைக் கொடு என்பதாகும்.

اُنْصُرْنَا فَاِنَّكَ خَيْرُ النَّاصِرِيْنَ ③

திட்டமாக நீ வெற்றியைக் கொடுப்போர்களில் கைரானவன். ஆகவே எங்களுக்கு வெற்றியைக் கொடுத்தருள்.

وَافْتَحْ لَنَا فَاِنَّكَ خَيْرُ الْفَاتِحِيْنَ ③

திட்டமாக நீ திறபிடியைக் கொடுப்போர்களில் கைரானவன். ஆகவே எங்களுக்கு நப்ஸின் மகாமை விட்டும் ஏறுகிறதிலும், ரூஹின் ஜோதிகள் வெளியாவதிலும் முத்தலகான பனாவைக் கொண்டும் பனாவாவதிலும், எங்களுக்கு திறபிடி கொடுத்தருள்.

وَاغْفِرْ لَنَا فَاِنَّكَ خَيْرُ الْغَافِرِيْنَ ○

திட்டமாக நீ குற்றத்தை மன்னிப்போர்களில் கைரானவன். ஆகவே எங்களுக்கு "யான்" "என"தென்ற பாவத்தை மன்னித்தருள்.

وَارْحَمْنَا فَاِنَّكَ خَيْرُ الرَّاحِمِيْنَ

திட்டமாக நீ அன்பு பாவிப்போர்களில் கைரானவன். ஆகவே, எங்களுக்கு ரஹ்மத்துல் "இம்தினானிய்யா" என்ற பரோபகாரத்தைக் கொண்டும், "ரஹ்மத்துல் உஜூபிய்யா" என்ற அத்தியாவசிய உபகாரத்தைக் கொண்டும் அன்பு பாலித்தருள்.

وَارْزُقْنَا فَاِنَّكَ خَيْرُ الرَّازِقِيْنَ○

திட்டமாக நீ "அன்னமளிப்போர்"களில் கைரானவன். ஆகவே எங்கள் தேகத்துக்கு "அன்ன பனாதி"களையும் ஆத்மாவுக்கு அன்னமாகிய "இர்பான்" என்ற ஞானத்தையும் கொடுத்தருள்.

وَاهْدِنَا وَنَجِّنَا مِنَ الْقَوْمِ الظّٰلِمِيْنَ

அநீதம் செய்யும்படியான கூட்டங்கள் என்னும் நப்சென்ற பிர்அவ்னையும் அவனின் பட்டாளங்களா விகாரத் தொழில்களை விட்டும் ஈடேற்றமாக்கி, எங்களுக்கு சித்துபுத்தியைக் கொடுத்து வழிகாட்டியருள்.

وَهَبْ لَنَا مِنْ لَدُنْكَ رِيْحًا طَيِّبَةً كَمَا هِيَ فِيْ عِلْمِكَ وَنْشُرْهَا عَلَيْنَا مِنْ خَزَآءِنِ رَحْمَتِكَ

உன்னுடைய இல்மென்னும் அறிவிலே ஏற்பட்டது போல், மணமான மஃரிபா என்னும் மெஞ்ஞான வாடையை எங்களுக்கு நீ தானமிடு. மேலும் நீ உன்னுடைய ரஹ்மத்துடைய பொக்கிஷங்களில் நின்றும், எங்கள் மீது நீ அதை சம்பூரணமாக்கி வைத்தருள்.

وَاحْمِلْنَا بِهَا حَمْلَ الْكَرَامَةِ مَعَ السَّلَامَةِ وَالْعَافِيَةِ فِي الدِّيْنِ وَالدُّنْيَا وَالْاٰخِرَةِ اِنَّكَ عَلٰي كُلِّ شَيْءٍ قَدِيْرٌ○

மேலும் அதைக் கொண்டும் தீனிலும் துன்யாவிலும் ஆகிரத்திலும் சங்கையும், ஈடேற்றமும், சுபீட்சமும் உடைய ஸ்தலமான அஃராப் என்ற மேடையிலே எங்களை ஏற்றிவை. திட்டமாக, நீயாகிறவன் பொருள்கள் அடங்களையும் ஆட்டி வைப்போன்.

اَللّٰهُمَّ يَسِّرْلَنَا اُمُوْرَنَا مَعَ الرَّاحَةِ لِقُلُوْبِنَا وَاَبْدَانِنَا وَالسَّلَامَةِ وَالْعَافِيَةِ فِيْ دِ

يْنِنَا وَدُنْيَانَا وَكُنْ لَّنَا صَاحِبًا فِيْ سَفَرِنَا وَخَلِيْفَةً فِيْ اَهْلِنَا

இறைவனே! எங்கள் தேகங்களும், எங்கள் இருதயங்களும் சுக ஜீவியாய் இருப்பதோடும்,

மேலும் எங்கள் தீனிலும், துன்யாவிலும் சலாமத் சௌக்கியமும் கிடைப்பதோடும், எங்கள் கருமங்களை லேசாக்கி வைத்தருள்.

மேலும் எங்கள் யாத்திரையில் அதாவது ஸ்தூல, சூக்கும, காரண யாத்திரையில் எங்களுக்குத் துணைவனாகவும் மேலும் எங்கள் குடும்பத்தில் அதாவது இருதய தெளிவும் வாக்கு நிறைவேற்றலும், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக்கொண்டும் ஈமான் கொண்டதில் கலப்பறுதலுமாகிய எங்கள் குடும்பத்தில் எங்களுக்கு உபகாரமாகவும் இரு.

وَاطْمِسْ عَلٰي وُجُوْهِ اَعْدَآءِنَا

எங்கள் விரோதிகளுடைய முகங்கள் மீதுள்ள பார்வையை நீ போக்கி வை. விரோதிகளாவது இப்லீஸ், துன்யா, நப்சு, கல்கு இவைகளாயிருக்கும்.

وَامْسَخْهُمْ عَلٰي مَكَانَتِهِمْ فَلَا يَسْتَطِعُوْنَ الْمُضِيَّ وَلَا الْمُجِيْءَ اِلَيْنَا

மேலும் அவர்கள் தலத்தின் பேரில் அவர்கள் ரூபங்களை மாற்றி வை.

அதாவது, அந்தகரணங்களை மாற்றி சுயாதீத அறிவுமாக்கி வை. அவ்விதம் செய்தால், எங்களளவில் சென்றேற சக்தி பெறமாட்டார்கள். அதாவது “மனோமய“மாக மாட்டார்கள்.

وَلَوْنَشَآءُ لَطَمَسْنَا عَلٰي اَعْيُنِهِمْ فَسْتَبِقُوا الصِّرَاطَ فَاَنّٰي يُبْصِرُوْنَ ○

நாம் நாடினால் அவர்கள் கண்களின் பேரில் பார்வையைப் போக்கி, நீங்கள் நடந்த பாதையை முந்துங்கள் என்று சொன்னால், எப்படி நடந்து போவார்கள்? போகமுடியாதல்லவா?

وَلَوْنَشَآءُ لَمَسَخْنَاهُمْ عَلٰي مَكَانَتِهِمْ فَمَا اسْتَطَاعُوْ مُضِيًّا وَّلَا يَرْجِعُوْنَ ○

மேலும், நாம் நாடினால், அவர்களின் தலத்தின் பேரில் அவர்கள் சூரத்தை மாற்றிப் போடுவோம். எங்கும் செல்லும்படியாக சக்தி பெறவும் மாட்டார்கள். மீளவும் மாட்டார்கள்.

يٰسٓ ○ وَالْقُرْاٰنِ الْحَكِيْمِ ○ اِنَّكَ لَمِنَ الْمُرْسَلِيْنَ ○ عَلٰي صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ○

تَنْزِيْلُ الْعَزِيْزِ الرَّحِيْمِ ○ لِتُنْذِرَ قَوْمًا مَّا اُنْذِرَ اٰبَاؤُهُمْ فَهُمْ غَافِلُوْنَ لَقَدْ حَقَّ

الْقَوْلُ عَلٰي اَكْثَرِهِمْ فَهُمْ لَا يُؤْمِنُوْنَ ○ اِنَّا جَعَلْنَا فِيْ أَعْنَاقِهِمْ اَغْلَالًا فَهِيَ اِلَي الْاَ

ذْقَانِ فَهُمْ مُقْمَحُوْنَ ○ وَجَعَلْنَا مِنْ بَيْنِ اَيْدِيْهِمْ سَدًّا وَمِنْ خَلْفِهِمْ سَدًّا

فَاَغْشَيْنَاهُمْ فَهُمْ لَا يُبْصِرُوْنَ ○

("யாஸீன்") சுயப்பிரகாச அகமியமே! பூராயமான வேதத்திருமறையின் பேரில் ஆணையாக! திட்டமாக, நீர் செவ்வையான பாதையின் பேரில் அனுப்பப்பட்ட முர்ஸலான நபிமார்களில் நின்றுமாயிருக்கும். இந்த வேதத்திருமறையின் சிறப்புடைய கிருபையாளன் கவ்முகளுக்கு அதாவது குறைஷியர்களுக்கும், அவர்கள் தகப்பன்மார்களுக்கும் உமக்கு முந்திய ரசூல்மார்கள், அச்சமூட்டப்படாததை நீர் அச்சமூட்ட இறங்கியது, அப்படி அச்சமூட்டப்படாததினால் அவர்கள் ஒன்றுபடுவதை விட்டும் மறந்தவர்களாகயிருக்கும். திட்டமாக இ அவர்களில் மிகுந்தவர்கள் மீது (அதாபு) வேதனையைக் கொண்டும் "ஊழ்வினை" ஏற்பட்டுப் போய்விட்டது.

ஆகவே அவர்கள் ஒருபோதும் ஈமான் கொள்ளவே மாட்டார்கள். திட்டமாக யாம் அவர்களுடைய கழுத்துகளில் இ கையை இணைத்து அடிகண்டங்களை ஆக்கினோம். அந்த அடிகண்டங்கள்(கிட்டி) அவர்களுடைய அலகுமட்டிலும் இருக்கிறது. ஆனபடியால் அவர்கள் தலையை குனியவே அல்லாமல் உயர்த்தினவர்களாயிருக்கும்.

கருத்தானது, அவர்கள் ஈமானுக்கு வழிபடவுமாட்டார்கள், தலைசாய்க்கவும் மாட்டார்கள் என்பதாம். இரகசியக் கருத்தாவது ஜடபுத்தியைக் கொண்டுயாம் "அடிகண்டம்" போட்டிருக்கிறோம்.

ஆகவே ஆத்மீகப் புத்திக்குத் தலைசாய்க்க மாட்டார்கள். அவர்களுக்கு "முன்னாலே" ஒரு அடைப்பும் அவர்களுக்குப் "பின்னாலே" ஒரு அடைப்பும் யாம் ஆக்கியிருக்கிறோம். மேலும் அவர்களுடைய பார்வைகளில் யாம் மூடியை ஆக்கியிருக்கிறோம். ஆகவே அவர்கள் ஒரு பொருளையும் பார்க்க மாட்டார்கள். முடிவான கருத்தாவது தேகத்தை

யான்இ யென தென்பது கொண்டும், முன்னும், பின்னும் அடைப்பை உண்டாக்கியிருக்கிறோம். ஆகவே “சித்து புத்தி“ உண்டாக மாட்டாது. அறிந்து கொள்வீராக! அந்த அரேபிய குறைஷிக் காபிர்கள் நபிகள் நாயகத்தின் வீட்டை இரவில் வளைந்து முற்றுகையிட்டு கொள்வதற்கு நாடினார்கள். அப்போது அலி ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுக்கு தங்களின் உடையைக் கொடுத்துப் படுக்கவைத்து விட்டு தங்களின் திருக்கரத்தினால் ஒருபிடி மண்ணை எடுத்து “ஷாஹதில் உஜூஹ்“ என்ற இந்த ஆயத்தை ஓதி பகைவர்களின் மீது எறிந்து விட்டுப் புறப்பட்டார்கள்.

شَاهَتِ الْوُجُوْهُ ٣

அல்லாஹும் மர்யிப் குலூபஹும் வஸல்ஸில் அக்தாமஹும்

முகங்கள் கெட்டுப் போகக் கடவது. ஆண்டவனே! அவர்களுடைய இருதயங்களை திடுக்கத்திலாக்கு! மேலும் அவர்களுடைய கால்களை கிடுகிடுக்க வை. கருத்தாவ: பகிர் முகங்கள் கெட:டுப் போகக் கடவது.

அதாவது அவர்களுடைய பகிர்முக சிந்தனையை திடுக்கத்திலாக்கி வை. மேலும் அவர்களுடைய இருவினை என்ற கால்களை கிடுகிடுக்கவை. அதாவது துவிதத்தைப் போக்கி வை.

وَعَنَتِ الْوُجُوْهُ لِلْحَيِّ الْقَيُّوْمِ ○ وَقَدْ خَابَ مَنْ حَمَلَ ظُلْمًا○ طٰسٓ طٰسٓمٓ

حٰمٓ عٓسٓقٓ

தரிபாடுள்ள நித்தியனுக்கு முகங்கள் தாழச்சி செய்யும். அதாவது நாமரூபமென்னும் முகங்கள் சச்சிதானந்தனுக்கு தாழ்ச்சி செய்யும். அநியாயத்தைச் சுமந்தவன் திட்டமாக பேர் கெட்டான். அதாவது இணைவைத்தவன் பேர் கெட்டான்.

“தாஸீன் தோயாகிறது“ நப்ஸின் ஸிபாத்தை விட்டும் “தஹாறத்து“ பரிசுத்தமாயிருக்கும் நிலையாம். “ஸீனாகிறது“ வேற்றுமையை விட்டும் சலாமத்தாயிருக்கும் நிலையாம். கருத்தாவது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாம்.

“தாஸீன், மீம், தோ“யாகிறது, ஹக்குக்கு அந்நியமாய் ஒன்றையும் காணாமலிருக்கும் இருதயத்தின் சுத்தமாம், “ஸீனா“கிறது ஹக்காய் நிற்கும்போது ஹக்கின் சிர்ராம். “மீமா“கிறது ஹக்கை அறிந்த மெஞ்ஞானிகளுக்கு “மின்னத்“ என்னும் உபகாரமாம்.

கருத்தாவது: முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாயிருக்கும்.

“ஹாமீம், ஐன், ஸீன், காப்“ ஹேயாகிறது ஹக்கு. மீமாகிறது முஹம்மது. ஐனாகிறது இல்மு. ஸீனாகிறது சலாமத்து. காபாகிறது கல்பு.

கருத்தாவது: ஹக்கு முஹம்மதைக் கொண்டும் வெளியானான். அவனுடைய இல்மு வெளியாகிறது அவருடைய இருதயம் சலாமத்தாயிருந்ததைக் கொண்டாயிருக்கும்.

ஆகவே ஹக்காகிறது ளாஹிரிலும், பாத்தினிலும் முஹம்மதாயிருக்கும்.

مَرَجَ الْبَحْرَيْنِ يَلْتَقِيَانِ ○ بَيْنَهُمَا بَرْزَخٌ لَّا يَبْغِيَانِ ○

அல்லாஹுத்தஆலா இரண்டு கடலை தோற்றச் செய்தான். ஒன்று இனிப்பு. அதாவது ஹக்கு. மற்றொன்று கசப்பு. அதாவது கல்கு என்ற சிருஷ்டி. கண்பார்வையில் இரண்டும் ஒன்றோடொன்று சந்திக்கிறது. அந்த இரண்டிற்குமிடையே, அவனுடைய குத்ரத்தில் நின்றும், திரையுண்டாயிருக்கிறது.

ஆகவே ஒன்று மற்றொன்றின் பேரில் கடந்து, ஒன்றோடொன்று கலந்து போகவில்லை.

திரையாகிறது "ஹாமீமா"யிருக்கும்.
நீங்களாகிறது "யாஸீனா"யிருக்கும்.
நீங்களாகிறது "தாஹா"வாயிருக்கும்.
நீங்களாகிறது "மூமினாகிய நப்சு" களுக்கு காரிய கர்த்தாவாயிருக்கும்.
நீங்களாகிறது "மௌலாவா"யிருக்கும் என்று கூறினார்கள்.
ஆறுதிசையாலும் எண் கோணத்தாலும் வரும் ஆபத்தைத் தடுக்க.

மேலே கூறப்பட்ட 7 ஹாமீமில் முந்தின ஹாமீமைக் கொண்டும் முகத்துக்கு முன்னாலும், இரண்டாவது ஹாமீமைக் கொண்டும் முதுகுக்குப் பின்னாலும், மூன்றாவது ஹாமீமைக் கொண்டும் வலது புறத்தாலும், நான்காவது ஹாமீமைக் கொண்டும் இடது புறத்தாலும், ஐந்தாவது ஹாமீமைக் கொண்டும் வானை நோக்கியும், ஆறாவது ஹாமீமைக் கொண்டும் பூமியை நோக்கியும், ஏழாவது ஹாமீமைக் கொண்டும் மேல்குறித்த ஆறு திசைகளிலும் மொத்தமாக கலிமாவிரல் கொண்டும் சுற்றி சைக்கினை செய்யவும். இவ்வாறு செய்வது ஆறு திசையாலும் எண்கோணத்தாலும் வரும் ஆபத்தைத் தடுப்பதற்காம்.

மேலும் ஏழு நரகத்தின் அதாபை விட்டும் தன்னையும், தன் குடும்பத்தினரையும் காப்பதற்காம். இதில் ஆழ்ந்த கருத்தாவது: அல்லாஹ் அஹதும் ஹாமீதும் முஹம்மதுவும் எல்லா முஹம்மதென்றேகமாய்க் காண்பதற்காம். ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

ஹாமீமுக்கு நபிகள் நாயகம் பிரசன்னமாகி அறிவித்த பொருள்.

அறிந்து கொள்வீர்களாக. ஹாமீம் என்பதற்கும் பொருள் தெரியாததால் உயிாகவலை கொண்டிருந்தேன். அப்பொழுது அருமை நாயகம் ஹபீபுல்லாஹ் உயிர்பிதா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தத்ரூபியாய் பிரசன்னமாகி திருவுளமானார்கள்.

அதாவது: கலிமாவில் முற்பகுதி முடிவில் வரப்பெற்ற "ஹு" வாகிறது ஹக்கு. அந்த ஹக்குதான் ஹாமீமில் வரப் பெற்ற ஹேயாகும். கலிமாவில் பிற்பகுதியில் முஹம்மதென்ற அச்சரத்தில் முதலில் வரப்பெற்ற மீம் முஹம்மது. அந்த முஹம்மதுதான் ஹாமீமில் வரப்பெற்ற மீமாகும்.

லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ்வின் அர்த்தமாகுமென்று ஹக்கின் நாவால் அன்போடு அருளினார்கள். அவர்களுக்கே என் உடல், பொருள், ஆவி மூன்றும் தத்தம். ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

○ حٰمٓ تَنْزِيْلُ الْكِتٰبِ مِنَ اللهِ الْعَزِيْزِ الْعَلِيْمِ ○ غَافِرِ الذَّنْبِ وَقَابِلِ التَّوْبِ

شَدِيْدِ الْعِقَابِ ذِي الطَّوْلِ لَآ اِلٰهَ اِلَّا هُوَ اِلَيْهِ الْمَصِيْرُ

ஹாமீம் என்னுடைய ஹபீபே! என்னுடைய மஹ்பூபே! சர்வத்தையும் அறிந்தவனான சிறப்பான அல்லாஹ்வில் நின்றும் இத்திருமறை இறக்கி வைத்ததரிருக்கும். ஹக்குத்தஆலா பாவத்தை மன்னிக்கிறவன். தௌபாவை ஒப்புக் கொள்கிறவன். வேதனை செய்வதில் கடிசானவன். விஸ்தீரணமான நிஃமத்துடையவன். அவைனத் தவிர ஒரு நாயனுமில்லை. மீளும் தலம் அவன் அளவிலாயிருக்கும்.

குர்ஆனை இறக்கியது கொண்டு கருத்தாவது: ஹகீகத்தில் ஹக்கும் வெளிக்கோலத்தில் முஹம்மதுமாயிருக்கும். அந்த முஹம்மதே வேத திருமறையான குர்ஆனாகும்.

மேலும் 'ஹாமீ' மென்றதற்கு அர்த்தமாகிறது **லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்** என்பதாயிருக்கும்.

மேலும் அந்த குர்ஆன் ஐனுல் ஐம்ஆம். மேலும் அவர்கள் நப்சின் குணத்தை மறைத்தவர்கள்.

அதாவது அதை மாற்றினவர்கள். ரஹ்மானியத்தான ஜமாலியான மகாமில் கபூல் செய்கிறவர்கள்.

ஜலாலியான மகாமில் வேதனை செய்வதில் கடிசானவர்கள்.

தௌஹீதுடைய மகாமில் அவர்களளவில் தான் சர்வமும் மீட்சியுறும்.

بِسۡمِ اللّٰهِ بَابُنَاتَبَارَكَ حِيْطَانُنَا يٰسٓ سَقْفُنَا كٓهٰيٰعٓصٓ كِفَايَتُنَا حٰمٓعٓسٓقٓ

حِمَايَتُنَا

பிஸ்மில்லாஹ் வாகிறது எங்கள் வாயிலாக இருக்கும்.

தபாரகா வாகிறது எங்கள் கோட்டையாக இருக்கும். யாஸீனாகிறது எங்கள் முகடாயிருக்கும்.

காப் ஹா யா ஐன் ஸாத்தாகிறது எங்களுக்குப் போதுமானதாயிருக்கும்.

ஹா மீம் ஐன் ஸீன் காப்பாகிறது எங்களுக்கு காவலாயிருக்கும்.

அதாவது தௌஹீது தாத்தியாகிறது கோட்டை. அதன் முகடு, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் . அதன் வாயல்இ அல்லாஹ் என்ற நாமம்.

கருத்தாவது லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்வாயிருக்கும். காபுக்குப் பொருள் அல்லாஹுத்தஆலா அவனுடைய கல்குக்கு போதுமென்றும்,

ஹாவுக்குப் பொருள் அல்லாஹ் அவனுடைய அடியாரை நேர்வழி காட்டுகிறவனென்றும்,

யாவுக்குப் பொருள் அல்லாஹ்வுடைய சிபத்தென்னும் கை அடியார்களுடைய கைகளுக்கு மேலிருக்கிறதென்றும்

ஐனுக்குப் பொருள் அல்லாஹ் தன்னுடைய படைப்புக்களை அறிந்தவனென்றும்,

ஸாதுக்குப் பொருள் அல்லாஹ் அவனுடைய வார்த்தைப் பாட்டில் உண்மையுடையவன் என்றும் பொருள்படும். ஆகவே ஹகீகத்தில் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமாயிருக்கும்.

ஹா மீம் ஐன் ஸீன் காப் - ஹக்கு முஹம்மதைக் கொண்டும் வெளியானான். அவனுடைய இல்மு வெளியாகிறது அவரவருடைய கல்பு சலாமத்தாயிருக்கிறது கொண்டாயிருக்கும்.

ஆகவே ஹக்காகிறது ளாஹிரிலும் பாத்தினிலும் முஹம்மதாயிருக்கும்.

மேலும் அவர்கள் பொருள்கள் அடங்களுக்கு முதல்வருமாய் உஜூதுக்கு மத்தியுமாய் உஜூதுக்கு ஆகிறுமாயிருக்கும். அவர்களைக் கொண்டுதான் உஜூது நிரப்பமாயிற்று. இதன் காரணத்திற்காகவே, அவர்களைக் காத்தமுன் நபி என்று கூறப்பட்டது.

ஆகவே லாஇலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவுடன் முஹம்மதுர் ரஸூலுல்லாஹி யைச் சேர்த்தாலல்லாது இஸ்லாம் என்றது உண்டாகாது.

மேலும் நம்முடைய நபிகள் பெருமானாரின் வயது, அறுபத்தி மூன்று. அதன் இரகசியமாவது குர்ஆனின் திறவுகோலான பிஸ்மில்லாஹ்வில் முதல் அலிபும் பேயும் குர்ஆனின் ஒடுக்கமான குல்அவூது பிரபின்னாஸ் என்ற சூராவில் முடிவெழுத்து ஸீனும் அப்ஜத் கணக்கின்படி கூட்டிப் பார்த்தால் அறுபத்தி மூன்று. ஆகவே உஜூதுக்கு அவ்வலும் ஆகிரும் அவர்கள் தான் என்று ஆயிற்று. ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

فَسَيَكْفِيكَهُمُ اللّٰهُ وَهُوَ السَّمِيعُ الْعَلِيمُ ٣

முஹம்மதே! காபிர்களுடைய கர்மத்திற்கும் உமக்கும் அல்லாஹ் போதுமானவன். அவன் சகலவற்றையும் கேட்கிறவனாகவும் அறிகிறவனாகவும் இருக்கும்.

سِتْرُ الْعَرْشِ مَسْبُولٌ عَلَيْنَا وَعَيْنُ اللّٰهِ نَاظِرَةٌ اِلَيْنَا بِحَوْلِ اللّٰهِ لَا يَقْدِرُ عَلَيْنَا

அர்சென்னும் ஆசனத்தில் உடுமானம், எங்கள் மீது விடப்பட்டதாயிருக்கும்.

அல்லாஹ்வென்னும் வல்லானின் கருணை கண், எங்கள் மீது பார்க்கிறதாக இருக்கும்.

வல்லானின் வல்லமை இருக்கும்போது, எங்கள் மீது விரோதிகள் வர தராணி பெற மாட்டார்கள்.

وَاللّٰهُ مِنْ وَّرَآءِهِمْ مُّحِيطٌ ○ بَلْ هُوَ قُرْاٰنٌ مَّجِيدٌ ○ فِيْ لَوْحٍ مَّحْفُوْظٍ○

அல்லாஹுத்தஆலா அவர்களுக்கு புறமே நின்று உள்ளும் புறமும் சூழ்ந்து கொண்டுதானிருக்கிறான். என்கிலும், அவர்கள் பொய்யாக்கி வைக்கின்ற இந்த குர்ஆன் ஷைத்தானாகிய எதிர்ப்பாளனை விட்டும் காக்கப்பட்டு ஏழு வானத்துக்கு மேலுள்ள வெண்மையான முத்துப் பலகையில், வலுப்பம் தாங்கியதாக இருக்கிறது.

கருத்தாவது, அத்துவித இல்மாகிறது துவிதத்தை விட்டும், காக்கப்பெற்ற முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய கல்பு எனும் பலகையில் சகலவற்றையும் ஒருமித்து சர்வ இல்மையும், சேகரமாக்கிய குர்ஆனாயிருக்கும்.

فَاللّٰهُ خَيْرٌ حَافِظًا وَهُوَ اَرْحَمُ الرَّاحِمِيْنَ (٣) ○

அல்லாஹுத்தஆலாவாகிறவன் பேணிக் காப்பவர்களில் மிக சிறந்தவனாயிருக்கும். மேலும் அவன் கிருபையாளர்களிலெல்லாம் கிருபையாளனாயிருக்கும்.

اِنَّ وَلِيِّ اللّٰهُ الَّذِيْ نَزَّلَ الْكِتَابَ وَهُوَ يَتَوَلَّى الصّٰلِحِيْنَ (٣) ○

திட்டமாக என்னுடைய கருமத்திற்குரியவனாகிறவன் வேதத்திருமறையை இறக்கின அல்லாஹ்வாயிருக்கும். அவன் நல்லோருக்கும் யானென்று நிற்பான்.

حَسْبِيَ اللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ عَلَيْهِ تَوَكَّلْتُ وَهُوَ رَبُّ الْعَرْشِ الْعَظِيْمِ ٣

நயவஞ்சகர்கள் பிற்காட்டிப்போய் விட்டார்களானால், முஹம்மதே! நீவிர் கூறும், அல்லாஹுத்தஆலா எனக்குப் போதுமானவன். ஹக்கான நாயன் அவனேயொழிய வேறில்லை. அவனிடத்திலேதான் யான் பரம்சாட்டிவிட்டேன். அவனாகிறது, வலுப்பமான அர்ஷையுடைய நாயன்.

வலுப்பமான அர்சைக் கொண்டு கருத்தாவது, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாயிருக்கும். இதற்காக வேண்டித்தான் வித்ரிய்யா என்னும் அரபிக் காவியத்தில் கூறப்பட்டுள்ளது:

புஆதுக நிஃமல் அர்ஷு பீஹி விதாவுனா, முராதுக மஹ்மா கான பீஹி விதாவுனா.

அல்லாஹுத்தஆலா ரசூலே அக்ரம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மிஃறாஜில் கூறினான்.

ஹபீபே! உம்முடைய ஹிருதயமாகிறது நல்ல அர்சு. அதில் நம்முடைய விரிப்பு எப்போதும் உண்டாயிருக்கிறது.

கருத்தாவது, நம்முடைய முஹப்பத்தைக் கொண்டும் உம்முடைய கல்புக்கு நாம் முடுகியிருப்போம். உம்முடைய நாட்டம்இ எங்கு இருந்ததோ அங்கு நம்முடைய ஒற்றுமை உண்டாகியிருக்கிறது.

மேலும் இதற்கொத்தவண்ணம் ஸஹ்லு ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்: கல்பும், நெஞ்சுமாகிறது அல்லாஹ்வுடைய அர்ஸைப் போலும், குர்ஸைப் போலுமாயிருக்கும்.

மேலும் அல்லாஹுத்தஆலா ஹதீது குத்ஸமியிலே எனக்கு என்னுடைய வானும் பூமியும் விஸ்தாரமாகவில்லை.

என்கிலும் என்னுடைய முஃமினான அடியானுடைய கல்பு விஸ்தாரமாயிற்று என்று கூறினான்.

بِسْمِ اللهِ الَّذِيْ لَا يَضُرُّ مَعَ اسْمِهِ شَيْءٌ فِيْ لْاَرْضِ وَلَا فِي السَّمَاءِ وَهُوَ السَّمِيْعُ

الْعَلِيْمُ ٣

அவனுடைய நாமதேயத்தைக் கூறினால் வானம், பூமியிலுண்டான எந்த பொருட்களும் தங்கடம் செய்யாதே

அத்தகைய அல்லாஹ் என்ற நாமத்தைக் கொண்டும், காவல்பாடு தேடுகிறேன். அவன் சகலவற்றையும் கேட்கிறவனாகவும் அறிந்தவனாகவும் இருக்கும்.

**நாமரூப அகமியம்**

ஆகவே! மேலே கூறப்பட்டதின் கருத்தாவது, ஒவ்வொரு நாமத்திற்கும் ஒவ்வொரு ரூபமுண்டு. அஸ்மாவாகிறது நாமம். ஜிஸ்மாகிறது ரூபம். இஸ்மெல்லாம் ரப்பு. ஜிஸ்மெல்லாம் அப்து.

அதற்கு விபரமாவது அல்லாஹ் என்ற இஸ்முக்கு (அப்து) ரூபம்.

மள்ஹருல் அதம் என்னும் இன்ஸான் அக்மலாகிய நம்முடைய நாயகம் நபிகள் பிரான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாயிருக்கும்.

இனி ரஹ்மான் என்கிற இஸ்முக்கு (அப்து) ரூபம் இன்ஸான் அடங்களாக இருக்கும்.

ஆகவே நம்முடைய நபிகள் பெருமானே அல்லாஹ் என்ற நாமத்தைக் கொண்டு கருத்தாகும்.

ஷெய்கு அபீ ஸயீதுல் கர்ராஸி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்:

அல்லாஹுத்தஆலா தன்னுடைய அடியார்களில் நின்றும், ஒருவருக்கு விலாயத்தைக் கொடுக்க நாடினால், அவர் மீது திக்ருடைய வாயிலைத் திறக்கிறான். அந்தத் திக்ரில் இன்பத்தை அனுபவித்துக் கொண்டால், முடுகுதலென்னும் வாயிலைத் திறக்கிறான். முடுகுதலென்னும் வாயிலைத் திறக்கின்றான். அதன்பின் மருகுதலென்னும் தானத்தளவில் உயர்த்தி தௌஹீதென்னும் சிம்மாசனத்தில் இருத்தாட்டி வைத்து, திரைகளை நீக்கி, அவரை (பர்தா)னிய்யத்தென்னும் வீட்டில் புகுதுவித்து, தன்னுடைய (மகிமை) ஜலாலிய்யத்து (மாட்சிமை) அள்மத்தை வெளியாக்குகிறான். அதைக் கண்டதும் யானென்பதை இழந்து தானென்றதைக் கூட்டி ஹுவிய்யத்தைக் கொண்டும் தரிபட்டு விடுகின்றார். ஆகவே இன்ஸானனே நீ திக்ரை மறக்காதே.

குத்புல் அக்பர் ஸெய்யிதினா அபுல் ஹஸன் அலீயுஷ்ஷாதுலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: யான் என்னுடைய நாயகம் அப்துஸ்ஸலாமிப்னு மஸீஸி ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் நாயகமே! எனக்கு வஸிய்யத்துச் செய்யுங்கள் என்று கேட்டேன்.

அதற்கவர்கள் கூறினார்கள்: அல்லாஹ், அல்லாஹ் எனக்கூறும். சிருஷ்டிகளுடைய நாமங்களை நாவிலெடுக்கிறதை விட்டும், உம்முடைய நாவை வெடிப்பாக்கிக் கொள்ளும்.

மேலும் அவர்கள் புறத்தால் வரும் வேற்றுமை என்னும் விக்கிரகங்களை விட்டும், உம்முடைய ஹிருதயத்தைத் தூய்மையாக்கிக் கொள்ளும். உம்முடைய உறுப்பினங்களை அசுத்தமான கருமங்களை விட்டும் பேணிக் கொள்ளும்.

மேலும் அவர்கள் புறத்தால் வரும் வேற்றுமை என்னும் விக்கிரகங்களை விட்டும் உம்முடைய ஹிருதயத்தைத் தூய்மையாக்கிக் கொள்ளும். உம்முடைய உறுப்பினங்களை அசுத்தமான கருமங்களை விட்டும் பேணிக் கொள்ளும். பர்ளுகளை நிறைவேற்றுவதைப் பற்றிப் பிடித்துக் கொள்ளும். இந்தப்படி நீவிர் நிறைவேற்றி வந்தால்இ உமக்கு விலாயத்து நிறப்பமாகிவிட்டது.

அல்லாஹுத்தஆலாவுடைய ஹக்கில் உம்பேரில் வாஜிபான கர்மத்தைக் கொண்டேயல்லாது, கல்குகளுடைய கருமத்திலிறங்காதேயும். அப்போது உம்முடைய வரஃ நிரப்பமாயிற்று என்று கூறினார்கள்.

மேலும், ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்: யான் அர்ஸளவில் சேரவேஇ அர்ஷுடைய ஒளிவில் மறைக்கப்பட்ட ஒரு மனிதனைக் கண்டு இவர் யார்? முகர்ரபாகிய மலக்கா? முர்ஸலான நபியா? என்று கேட்டேன்.

அவர் முகர்ரபான மலக்குமல்ல. முர்ஸலான நபியுமல்ல என்கிலும் அவர் உம்முடைய உம்மத்தில் நின்றும் ஒரு மனிதர்தான்இ அவருடைய நாவு ஓயாமல் அல்லாஹ்வுடைய திக்ரைக் கொண்டும் ஜெபித்ததாகவும்இ அவருடைய ஹிருதயம பள்ளிவாயிலைக் கொண்டும் கொழுகியதாகவும் அவருடைய அவருடைய தாய் தந்தையருக்கு யேச்சுப் பேச்சு வாங்கிக் கொடுக்காதவராகவும் இருந்தாரே! அப்படிக்கொத்த மனிதர் என்று மிஃறாஜில் ஹக்கின் புறத்தில் நின்றும் கூறப்பட்டது என்று திருவுளமானார்கள்.

وَلَاحَوْلَ وَلَاقُوَّةَ اِلَّا بِاللّٰهِ الْعَلِيِّ الْعَظِيْمِ.

எனக்கொரு உஜூதுண்டு என்ற பாவத்தை விட்டும் திரும்புதலும், உஜூது அல்லாஹ்வுக்கே என்ற வழிபாட்டின் பேரில் பலமும், வலுப்பமும் மேலாம்பரமும் உடைய அல்லாஹுத்தஆலாவைக் கொண்டே ஒழிய இல்லை.

وَصَلَّى اللهُ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدِنِ النَّبِيِّ الْأُمِّيِّ وَعَلٰى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا

كَثِيْرًا دَائِمًا اِلٰى يَوْمِ الدِّيْنَ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ

அல்லாஹுத்தஆலா சர்வ பொருள்களுக்கும் ஆதி மூலமாகிய நம்முடைய நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களுடைய பரிசுத்த கிளையார்கள் மீதும், அவர்களின் பரிசுத்த ஆவியை நேசித்த தோழர்கள் மீதும்இ ஸலவாத்து சொல்வானாகவும். மேலும் தீனுடைய நாள் முழுவதிலும் நேமமாக மிகுதியாய் ஸலாமும் சொல்வானாகவும், புகழென்ற புகழங்களும் ஆலத்தாரை எல்லாம் படைத்துப் போசிக்கின்ற அல்லாஹ்வென்னும் நாமதோயத்தையுடைய ஒரே பொருளான தாத்துக்குடையதாயிருக்கும்.

**சலவாத்துச் சொல்வதின் இரகசியம்**

அகம் பிரமாசுமியான சிகாமணிகளே! அறிந்து கொள்வீராக!

சலவாத்துச் சொல்வதின் உள்ளமை இரகசியமாவது: நபிகள் பெருமானின் நேர்வழியையும், நிரப்பத்தையும், கபூல் செய்து அவர்களின் தாத்தையும் சிபாத்தையும் நம்மில் வருவிக்க பிரீதி கொள்வதாய் இருக்கும். இதற்கிணங்க ஷெய்கு அப்துல் கரீம் ஜீயலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்:

நபிகள் பெருமான் மீது சலவாத்து சொல்வதின் இரகசியமாகிறது: ஐயறிவில் அவர்களின் வெளிரங்க கோலத்தையும், பாத்தினில் அவர்களின் மஃனாவையும் ஷுஹுது - தோத்திரவு செய்வதாயிருக்கும்.

இப்படி தோத்திரவு செய்வதால் ஹக்களவில் வெகு தீவிரத்தில் இரண்டறக் கலந்து நிற்பதுண்டாகும். இவ்விதத் தோத்திரவு செய்கிறவர்களை விட்டும், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் ஒரு இமைப் பொழுதாவது மறைய மாட்டார்கள் என்று கூறினார்கள்.

மேலும், இதற்கிணங்க மஹாத்மா குருபிரான் குத்புல் அக்பர் மௌலானா அபுல்ஹஸன் அலிய்யிஷ்ஷாதுலி ஆண்டகையவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வினாணை ஒரு இமைப் பொழுதும் என்னை விட்டும் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை திரை போடப்பட்டால் நான் என்னுடைய நப்சை முஸ்லிமானவர்களுடைய துகையில் நின்றும் எண்ண மாட்டேன் என்று கூறியிருக்கிறார்கள்.

நம்முடைய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அல“லாஹுத்தஆலா தன்னுடைய நூரில் நின்றும் படைத்தான். ஆலமடங்களையும், அவர்களுடைய ஒளியில் நின்றும் படைத்தான். அவர்களை அல்லாஹுத்தஆலா ஆலத்தில் நின்றும் தன்னுடைய பார்வைக்குத் தலமாக்கிக் கொண்டான்.

அவர்கள் தான் ஆலமலக்கூத்துக்கும் ஆலமுல்குக்கும் சொர்க்கலோகத்துடையவர்களுக்கும் நரகலோகத்துடையவர்களுக்கும் நாளை அல்லாஹ்வுடைய லிகாவைப் பெற்றுக் கொள்ளும் தலமான கரீபென்னும் மணல்மேடையுடையவர்களுக்கும், குத்பாக இருக்கும்.

மேலும் அவர்கள் சகல மௌஜூதாத்தடங்கலையும் காண சிறப்பானவர்களாயிருக்கும். அவர்களுக்கு மேல் ஒரு மலக்குமில்லை. அவர்கள்தான் மலக்குகளுக்கு நாயகம். மேலும் சங்கையான மலக்குகளுக்கெல்லாம் நாயகமானவர்களும் அவர்கள்தான். அவர்களில்தான், ஆலம் என்னும் திருகையை அல்லாஹ் சுமத்தாட்டுகிறான். அவர்களுக்கு ரூஹு என்றும் மலக்கென்றும் அம்ருல்லா என்றும் கூறப்படும்.

அறிந்து கொள்வீராக! இந்த மலக்கைத்தான் சூபியாக்கள் ஹகீகத்துல் முஹம்மதிய்யா என்று கூறுகிறார்கள். இந்த ரூஹுவென்னும் மலக்குவிற்கு கூறப்படும் வர்ணிப்பால் அவர்கள் அந்தரங்கத்தில் யாராயிருக்குமென்று பார்த்துக் கொள்.

மேலும் நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவவர்கள் இல்லாதிருக்கில், இந்த துன்யாவை இல்லாமையில் நின்றும், வெளியில் தோற்றுவிக்கப்படாதென்று கூறியிருக்கிறார்கள். ரூஹுல் பயானென்னும் தப்ஸீரில் வரையப்பெற்றுள்ளது.

**“ஹகீகத்துல் முஹம்மதிய்யா“** நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அளவில் சேர்ந்த உள்ளமை சகல உள்ளமைக்கும் அடிமூடு. அவர்களுடைய தோற்றம் சிருஷ்டிக்கப்பட்ட சகல ஹகீகத்துக்கும் அசல். அவர்களளவில் தான் கர்மமடங்களும் மீளுமென்று ஆரீபீன்கள் கூறியிருக்கிறார்கள்.

மேலும், சல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய தாத்தைக் கொண்டுதான் சகல வஸ்தும் கொழுகப்பட்டு இருக்கிறது. அந்த தாத்தே சர்வ பொருள்களிலும் சென்றிருக்கிறது. மேலும் அவர்களுடைய இரகசியம்தான் பொருள்களடங்களையும் சூழ்ந்து கொண்டு நிற்கிறது. அதை விட்டும் ஒரு பொருளும் தப்பவில்லை. அவர்களே வேதம். அவர்களே கலிமா. அவர்களே ஈமான். அவர்களே இஸ்லாம். அவர்களே அமானிதம். அந்த அமானிதத்தைக் காப்பாற்றாதவன் மோசம் போனான். உஷார். உஷார்.

மேலும் அவர்கள் காக்கப்பட்ட அகமியப் பொருளாயிருக்கும். நம்மில் நின்றும் உஜூதில் முந்தினவர்கள். மேலும், வஹ்தத்துல் வுஜூதை தெரிசிப்பவன் அவிடத்தில் ரசூலை தெரிசிக்கவில்லையானால், அவன் ஷரீஅத்தை நிராகரித்த ஸிந்தீக்காவான். மேலும் நம்முடைய நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹக்குக்குமஇ கல்கிற்கும் இடையில் ரஹ்மத்துடைய திரையாயிருக்கும்.

அவர்களில்லாதிருக்கில், காணப்பட்ட மௌஜூதாத்து அடங்களும் ஹக்குடைய தஜல்லியால் அழிந்து ஒன்றுமில்லாது போய்விடும். ஹக்குடைய தாத்துடைய தஜல்லியை ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தவிர பின் ஒருவரும் கபூல் செய்ய சக்தி பெறமாட்டார்கள்.

ரசூல் நாயகம் அவர்கள் தான் அந்த தஜல்லியை கபூல் செய்வார்கள். அவர்களில் நின்றுமேஇ பின் நபிமார்கள் ஒலிமார்கள், முதலான கவாஸானவர்க்ள பேரிலும் மற்ற ஏனையோர்கள் பேரிலும், பங்குண்டாகும்.

மேலும் அவர்களின் தாத்துடைய ஒளி ஆலமெல்லாம் பத்திப் பாயுது. அவர்களுக்கு ஒரு பார்வை, ஹக்களவிலும், ஒரு பார்வை கல்களவிலும் இருக்கிறது. அவர்களுடைய தாத்தில் நின்றும் இலாஹிய்யத்தான பைளு அருள்இ ஆலத்தார் மீது, ஏகபிறவாகமாய் ஒலித்தோடிக் கொண்டேயிருக்கிறது.

மேலும் அவர்கள் ஹக்குடைய தாத்துக்குக் கண்ணாடி. ஹக்குத்தஆலா, அவன் தன்னுடைய தாத்தைக் கொண்டும் அவர்களிலே அல்லாமல் வெளியாக மாட்டான். மற்ற கல்குகளில் வெளியாவதெல்லாம் சிபாத்தைக் கொண்டுதான் வெளியாவான்.

ஆகவே, பொருள்களை பார்க்கும் போதெல்லாம், பரிபூரணமாகிய நூரே முஹம்மதிய்யாவை தெரிசனை செய்வது நமது கடமையாகும். ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

**வினா:** யாராகிலுமொருவர், எல்லாப் பொருள்களையும்இ நபி பெருமானின் ஒளியினால் கிருஷ்டிக்கப்பட்டதைப் போன்று நாய், பன்றி, காபிர், முஷ்ரிக் இவைகளையும் அதைக் கொண்டே தானே படைக்கப்பட்டிருக்க இவைகளை அசுத்தமாகவும் வெறுக்கத்தக்கதாகவும் ஆக்க வேண்டிய காரணம் என்ன? என்று கேள்கப்பட்டால்?
**விடை:** நூரே முஹம்மதிய்யா என்னும் ஒளி சர்வ பொருள்களுக்கும் அடிமூலமாயிருக்கிறது. அடிமூலத்தின் மீது பனர்களுடைய குணாகுணங்களும், சட்டதிட்டங்களும் போய் சேராது.

உத்தமனே! நீ என்றாய் யோசித்துப் பார். மண்ணைக் கொண்டு பற்பல தானியங்களும், புற்பூண்டுகளும் உற்பத்தியாகிறது. அவைகளை ஆடு, மாடு முதலிய ஜீவராசிகள் புசிக்கின்றன. இவைகளெல்லாம் மானிடவர்க்கத்தானுக்கு உணவாகி அதனால்

முதுகந்தண்டின் வழியாக இந்திரியம் உற்பத்தியாகி ஸ்திரீகளின் கெர்ப்பாசயத்துள் பாய்ச்சப்பட்டு இரத்தமாகவும், எலும்பாகவும், சதையாகவும் ஆகிறது. ஆனால் அடிமூடாகிய அந்த மண்ணோ? இந்த குணா, குணங்களை விட்டும் புறம்பானதாயிருக்கிறது.

மேலும் பாருங்கள்! ஒரு தீண்தை கூண்டிலிருக்கும் மையமானது எல்லா எழுத்துக்களுக்கும் ஆதியாய் இருக்கிறது. என்கிலும், அம் மையைக் கொண்டும் வேதத்திருமறை எழுதப் பெற்றால் ஒளுவில்லாமல் தொடப்படாதென்றும், மகிமை வாய்ந்த சட்டதிட்டங்களையும், நல்வாசகங்களையும் எழுதப்பெற்றால் அதற்கு மதிப்பும் ஏற்பட்டு இருக்கிறது. பிர்அவ்ன், ஷெய்த்தான் தெம்மாங்குப்பாட்டு, பொருத்தக்குறைவான வியாசகம், முதலியவற்றை எழுதப்பெற்றால் மகிமை நீங்கி துவேஷமாய் வெறுக்க நல்லோரிடத்தில் இடமுண்டாகிறது. ஆகவே அதைப் பேணிக் கொள்.

மேலும், நபிகள் பெருமான் உம்மி என்னும் அசலான ஆதிமூலமாய் இருக்கிறார்கள். அரபி பாஷையில் உம்மி என்ற வாக்கியத்திற்குஇ அசலென பொருள்படும். எல்லா தேசங்களுக்கும் மக்கா அடிமூலமான அசலாயிருப்பதால் அதற்கு உம்முல் குறா என்றும் மகான்களின் ஒததோர்மித்தலின் புறத்தால் குர்ஆன் அடங்களுக்கும் சூரே பாத்திஹா அசலாயிருப்பதால் அதற்கு உம்முல் கிதாபென்றும் கூறப்பட்டிருப்பதுபோல், நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், உம்மி என்று கூறப்பட்டது. ஆகவே அல்லாஹுத்தஆலா நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நமக்கு ரஹ்மத்தாய் கொடுத்தருளியதற்கு ஷுக்கூர் செய்து கொள்ளவும். அப்படி செய்வாயானால், உனக்கு அல்லாஹ்வின் திருவுளப் பொருத்தம் உண்டாகும்.

அல்லாஹுத்தஆலா முற்ஸலீன்களுக்குச் சிகாமணியான ஹபீபுல்லா மீதும் அவர்களின் ஆலு அஸ்ஹாபிகள் மீதும் சலவாத்தும் ஸலாமும் கூறுவானாகவும் ஆமீன் வல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

ஹிஸ்புல் பஹ்ர் பிரார்த்தனை தர்ஜுமா முற்றிற்று.